உ

கடவுள் துணை.


# செந்தமிழ்.

தொகுதி-௩௪] தாது ௵ மாசி ௴ [பகுதி-௪.

Vol. 34. February — March 1937. No. 4.


## நியாயப்பிரவேச மணிமேகலை.

[௯௨-ஆம் பக்கத் தொடர்ச்சி]

மணிமேகலையுள் ௯அ-ம் அடிதொடங்கிச் சொல்லப்பட்டிருத்தற்குரிய காரியானுமானநிரூபணமும் காரணானுமானநிரூபணமும் காணப்படாமையால் அவற்றிற்கு வேறுதாரணங்கள் காட்டி விளக்கப்பட்டன.

### தூய சாமானியானுமானம்.

இனி, நிறுத்தமுறையுள் எஞ்சிநின்ற சாமானியானுமான நிரூபணம் ௬௯-ம் அடிதொடங்கிக் காணப்படுதலால் அதன் உரை விளங்குதற்பொருட்டு அவ்வனுமானவரலாறு இங்கு வரையப்படுகிறது.

சாமானியானுமானமாவது: துணிபொருளுடன் ஒருநிலைக்களத்து நியதமாய் (தப்பாமல்) இருக்கும் பொருளை ஏதுவாகக் கொண்டு, அதனுடனிருக்கும் துணிபொருளை அந்நிலைக்களத்தில் உண்டென்று துணிதற்குச் சாதனமாயிருப்பது.

இதற்கு உதாரணமாவது: சத்தம் அநித்தப்பொருள் என்று நிரூபிக்கக்கருதும் ஒருவன், அவ்வநித்தத்தன்மையாகிய துணிபொருளுடன் ஒருநிலைக்களமாகிய குடமுதலிய அநித்தப்பொருள்

*

களில் தவருதிருக்கும் பண்ணப்படுதற்றன்மையை ஏதுப்பொருளாகக்கொண்டு அன்னுவயவியாத்தியாலும் வெதிரேகவியாத்தியாலும் 'சத்தம் அநித்தம்' எனக் காட்டுதற்கு ஏற்ற ஐவகை உறுப்புக்களைக் கூறுதலாம்.

1. அன்னுவயப்பகுதி.

அங்ஙனம் கூறுமிடத்து, (1) "சத்தம் அநித்தம்" என்று கூறுதல் ஐவகையுறுப்புக்களுள் முதலாகிய பக்கவசனம் என்னும் உறுப்பாம். இதனுல், வாதி, சத்தம் அநித்தப்பொருள் என்னும் உணர்வுடையன் என்னும் உணர்வு எதிரியிடை யுதிக்கும்; உதிக்கவே இவன் இங்ஙனம் உணர்தற்குச் சான்று என்னை? என்னும் அறியலுறவு தோன்றும்.

அது தோன்றவே, அதனை அறிவிக்கவேண்டி இரண்டாம் உறுப்பாகிய ஏதுவசனம் கூறுவான். அது,

(2) '(சத்தம்) பண்ணப்படுதலால்' என்பது. (சத்தம் பண்ணப்படுதலாவது: பல் நா அண்ணம் இதழ் முதலிய உறுப்புக்களின் முயற்சியால் எழுத்தொலியுண்டாக்கப் படுதல்.)

இவ்வேதுவாசகங்கேட்ட எதிரிக்கு, சத்தம் பண்ணப்படுவதாயிருந்தால் அது அநித்தமாயிருக்கவேண்டும் என்பது என்ன நியமம்? என்னும் சங்கையுண்டாகாநிற்க அச்சங்கை தீருமாறு அநித்தத்தன்மையாகிய துணிபொருளை விட்டுநீங்காத தொடர்புடையது ஏதுப்பொருளாகிய பண்ணப்படுதல் என்பதைக் காட்டவேண்டி வியாத்திவசனத்துடன்கூடிய மூன்ருவது உறுப்பாகிய திருஷ்டாந்தவசனம் கூறுவான். அது,

(3) 'யாதுயாது பண்ணப்படுவது அது அது அநித்தமாயுள்ளது; குடம்போலும்' என்பது.

இதனுள் 'யாதுயாது பண்ணப்படுவது அது அது அநித்தமாயுள்ளது' என்பது வியாத்திவசனம்.

வியாத்தியாவது: ஏதுப்பொருள், தானுள்ளவிடத்தில் தப்பாதிருக்கும் துணிபொருளில்லாதவிடத்தில் இல்லாததாய் அத்துணிபொருளுடன் ஒருநிலைக்களத்திருத்தல்.

இவ்வன்னுவயவியாத்திவசனத்தால், ஏதுப்பொருளாகிய பண்ணப்படுதலுள்ளவிடத்தெல்லாம் துணிபொருளாகிய அநித்தத்தன்மையுமுண்டு என வாதியுணர்த்துகிறான் என்று எதிரி யுணர்வான்.

அங்ஙனம் உணரினும் அவ்வுணர்வு வாதியினுணர்வாயொழியாது எதிரிக்கும் உடன்பாடாதற்குரியது என்பதுதோன்ற ஏதுப்பொருளுடன் துணிபொருளும் கூடியிருப்பதாக எதிரியால் அறியப்பட்டிருக்கும் ஒரு பொருளை உதாரணமாகக்கூறுவது திட்டாந்தம் என்னும் உறுப்பாம். அது 'குடம்போலும்' என்பது.

இவ்வாறு திட்டாந்தவுறுப்புக்கூறவே எதிரியும், தான் ஏதுப்பொருளாகிய பண்ணப்படுதலுள்ளதாயறியப்பட்ட படம்முதலிய பொருள்களினும் துணிபொருளாகிய அநித்தத்தன்மையுள்ளதை ஆராய்ந்தறிவான். அறியவே பண்ணப்படுதலாகிய ஏதுப்பொருளுள்ளவிடங்களில் அநித்தத்தன்மையாகிய துணிபொருள் உண்டு என்னும் பொதுவுணர்வு எதிரிக்கு உண்டாகும்.

இதன்மேல் உபநயவுறுப்புக் கூறப்படும். அது,

(4) 'இதுவும் அங்ஙனம்' என்ற பொதுவாய்பாடுடையது. இதன்பொருள்: 'சத்தமும் குடம்போல் அநித்தத்தன்மையின் வியாப்பியமான பண்ணப்படுதலுடையது' என்பதாம்.

இதனால், 'அநித்தத்தன்மையைவிட்டு விலகியிராத பண்ணப்படுதலுடையது சத்தம்' என்னும் உணர்வு எதிரிக்குத் தோன்றும். இவ்வுபனயவுறுப்பால் உண்டாம் உணர்வும், ஏதுவுறுப்பால் உண்டாம் உணர்வும் ஒன்றுபோலத் தோன்றுமாயினும், ஏதுவுறுப்பால் துணிபொருளுடன் ஏதுவுக்குள்ள உடனிகழ்ச்சி தோன்றாமையும், இந்நிகமனவுறுப்பால் துணிபொருளுடன் ஏதுவுக்குள்ள உடனிகழ்ச்சி தோன்றுதலும் ஆகிய வேறுபாடுடைமையால் இது வேறு கூறப்பட்டது.

இனி, துணிபொருட்பேறுதோன்றுமாறு நிகமனவுறுப்புக் கூறப்படும்: அது,

(5) 'ஆதலின் இங்ஙனம்' என்னும் பொதுவாய்பாடுடையது. இதன்பொருள்: 'சத்தம் அநித்தமாதலின்வியாப்பியமான பண்ணப் படுதலுடைமையால் பண்ணப்படுதலின்வியாபகமான அநித்த மாதலையுடையது' என்பதாம்.

இவ்வளவும் அன்னுவயப்பகுதி. இனி, இதன் வெதிரேகப் பகுதி வருமாறு:—

## 2. வெதிரேகப்பகுதி.

(1) 'சத்தம் அநித்தம்' என்பது பக்கவசனம்.

(2) 'பண்ணப்படுதலால்' என்பது ஏதுவசனம்.

(3) 'யாதுயாது அநித்தமன்று அது அது பண்ணப்படுவதன்று; ஆகாயம்போலும்' என்பது வைதன்மியதிருஷ்டாந்தவசனம். இதனால் துணிபொருளில்லாதவிடத்தெல்லாம் ஏதுப்பொருளு மில்லை என்னும் உணர்வால் பிறழ்ச்சியின்மை தோன்றும்.

(4) 'இது அங்ஙனமன்று' என்பது உபனயவசனம். இதன் பொருள், அநித்தமன்மையின்வியாபகமான பண்ணப்படுதலின்மை யுடையதன்று என்றபடி.

இனி, இதன் நிகமனவுறுப்பு,

(5) 'ஆதலி னிங்ஙனமன்று' என்பது. இதன்பொருள்: பண்ணப்படுதலின்மையின்வியாப்பியமான அநித்தமாதலின்மை யுடையதன்று என்பதாம்.

இவ்விடயங்களை யுட்கொண்டு மணிமேகலை உகூ-ஆம் பாட்டின் கூகூ-ஆம் அடிதொடங்கி எஎ-ஆம் அடியளவும் இச்சாமாநியானு மானநிருபணம் செய்யப்பட்டிருக்கிறது. இதனைத் தொடக்கம் செய்திருக்கவேண்டிய முதல் அடி ஒன்று காணப்படவில்லை யென்று முன்னமே சொல்லப்பட்டது. அது காரியானுமானத் தொடக்கம்செய்திருக்கும் "தூய காரிய வேதுச் சுபாவம்" (கூஅ)

என்னும் அடிபோல 'தூயசா மானிய வேதுச் சுபாவம்' என்னும் பொருளமையப்பெற்றதோ ரடியாயிருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. ஆதலால் அப்பொருளமையுமாறு ஓரடி படைத்து ஏனையடிகளுக்கு முன் வைத்துப் பூர்த்திசெய்துகொண்டு உரை வரையப்படுகிறது.

'(தூயசா மானிய வேதுச் சுபாவம்)
ஆயிற் சத்த மநித்த மென்றல்
பக்கம், பண்ணப் படுத லாலெனல்
பக்க தன்ம வசன மாகும்,
யாதோன்று யாதோன்று பண்ணப் படுவது
அநித்தங் கடம்போ லென்றல் சபக்கத்
தொடர்ச்சி, யாதோன் றநித்த மல்லாதது
பண்ணப் படாததா காசம் போலெனல்
விபக்கத் தொடர்ச்சி மீட்சிமொழி யென்க.' (சுசு-எசு)

என்பது சாமானியானுமானநிரூபணம்.

இதன்பொருள்: 'தூயசாமானியவேதுச்சுபாவம் ஆயின்' என்றது குற்றமற்ற சாமானியானுமானத்தின் இயல்பினை ஆராய்ந்து சொல்லுமிடத்து என்றவாறு.

கீழ், "காரிய காரண சாமானியக்கருத்து, ஓரிற் பிழைக்கையு முண்டு" என்றார்; 'பிழைக்கையும் உண்டு' என்ற உம்மையால் அவை பிழையாமையும் உண்டு என்பது பெறப்பட்டது என முன்னமே சொல்லப்பட்டது; அங்ஙனம் பிழையாத மூவகை அநுமானங்களையும் முறையே நிரூபிக்கக்கருதி முதலில் காரியானுமானம் சொல்லத்தொடங்கியவர் 'தூயகாரிய வேதுச் சுபாவம்' என்று அடைகொடுத்தோதினமையால் அவ்வாறே 'தூயசா மானிய வேதுச் சுபாவம்' என்று இவ்வனுமானநிரூபணத்தின் முதலடி எழுதப்பட்டிருக்கலாமென்று தோன்றுகிறது.

இங்குச் சொல்லப்படுவது தூயசாமானியானுமானமென்றமை யால், உஎ-ஆம் பாட்டில் "கடந்திகழ் யானைக் கானவொலி கேட்டோன், உடங்கெழில் யானையங் குண்டென வுணர்தல்' என்பது போன்ற குற்றமுள்ளசாமானியானுமானம் விலக்கப்பட்டதாயிற்று.

அவ்வனுமானம் குற்றமுடையதாதல் யானைக்காட்டில் வேட்டைவிருப்பாற்சென்ற தசரதன் அக் கானவொலிகேட்டு அங்கு

யானையுண்டென்று துணிந்தெய்த அம்பு சுரோசனனுயிரை உண்டமையாலறியலாம்; இங்கு உதாரணமாகக்காட்டப்படும் அனுமானம் அங்ஙனமன்று என்பது தோன்ற "தூயசா மானிய வேதுச் சுபாவம்" என அடைகொடுத்து விசேடிக்கப்பட்டது.

"சாமானியவேது" என்றது துணிபொருளுக்கும் தனக்கும் பொதுவாயிருக்கும் ஒருநிலைக்களத்தில் அத்துணிபொருளோடிருக்கும் ஏதுவை உறுப்பாகக்கொண்ட அனுமானம் என்றவாறு. 'ஏது' என்றது ஏதுவுறுப்புக்குப் பொருளாகுபெயராய்ப் பின் சினையாகுபெயராய் அனுமானத்துக்காயிற்று.

சுபாவம் - இயல்பு; அதாவது: அவ்வனுமானமிருக்கும் இருப்பு என்றபடி.

ஆயின் என்றது ஆராய்ந்துசொல்லுமிடத்து என்றவாறு.

"சத்தம் அநித்தம் என்றல் பக்கம்" என்றது சத்தத்தைப் பக்கப்பொருளாகக்கொண்டு அதன்கண் அநித்தத்தன்மையைத் துணியக்கருதும் ஒருவன் 'சத்தம் அநித்தப்பொருள்' என்று கூறுதல் அவ்வனுமானத்தின் முதலுறுப்பாகிய பக்கவசனமாம் என்றவாறு.

"பண்ணப்படுதலால் எனல் பக்கதன்மவசனமாகும்" என்றது அப்பக்கவசனத்தை அடுத்து இரண்டாவது உறுப்பாக "(அச்சத்தம்) முயற்சியாற் பண்ணப்படுதலால்" என்று கூறுவது ஏதுவசனமாம் என்றவாறு.

இதனுட் சொல்லப்பட்ட, "முயற்சியாற்பண்ணப்படுதல்" ஏதுப்பொருள்; இது, தானுள்ளவிடத்தெல்லாம் தன் துணிபொருளும் உள்ளதாயிருக்கும் சபக்கத்தொடர்ச்சியும், தன் துணிபொருளில்லாதவிடத்தெல்லாம் தானும் இல்லாதிருக்கும் விபக்கத்தொடர்ச்சியும் உடையது. இதனை, பின் சாதன்மிய வைதன்மிய திட்டாந்தங்காட்டுமிடங்களிற் காணலாம்.

பண்ணப்படுதலாகிய இவ்வேதுப்பொருள் பக்கப்பொருளாகிய சத்தத்துக்கு விசேடணமானமையால் பக்கதன்மமெனப்பட்டது. விசேடணம் யாதாயிருந்தாலும் அது விசேடியத்தின் தர்மம் எனக்கொள்ளுதல் தருக்கநூல்வழக்கு. ஏதுப்பொருளெல்லாம் பக்கப்பொருளுக்கு விசேடணமாகவே இருக்கவேண்டும் என்னும்

கருத்தால் "பக்கத்து ஊன்றிநிற்றல்" ஏதுவிற்கு ஓரிலக்கணமாகச் சொல்லப்பட்டமையால் அது பக்கதன்மமென வழங்கப்பட்டது.

இனி மூன்றுமுறுப்பினுள் முதலாவதாகச் சபக்கத்தொடர்ச்சி யுடன்கூடிய சாதன்மியதிட்டாந்தவசனம் சொல்லப்படுகிறது: "யாதொன்று யாதொன்று பண்ணப்படுவது, அநித்தங் கடம்போ லென்றல் சபக்கத்தொடர்ச்சி" என்று.

இதன்பொருள்: 'எது எது முயற்சியாற் பண்ணப்படுவதோ அது அது அநித்தப்பொருளாயுள்ளது' என்றுகூறுதல் சபக்கத் தொடர்ச்சியுடன்கூடிய திருஷ்டாந்தவசனம் என்பதாம்.

வினவடுக்கால் சுட்டடுக்கு வருவித்துரைக்கப்பட்டது; இத ஞல், முயற்சியாற்பண்ணப்படுவனவெல்லாம் அநித்தம் என்றவாறு யிற்று. இது சபக்கத்தொடர்ச்சிவசனம். குடம்போல் என்றது திருஷ்டாந்தவசனம் இதனாற்சொல்லப்பட்ட குடம் திருஷ்டாந்தப் பொருள். குடத்தில், பண்ணப்படுதலாகிய ஏதுப்பொருளும் அநித் தத்தன்மைபாகிய துணிபொருளும் ஒருங்கிருத்தலால் அன்னுவய திட்டாந்தமாயிற்று.

சபக்கத்தொடர்ச்சியென்றது உடன்பாட்டுடனிகழ்ச்சி; அது அவ்வுடனிகழ்ச்சியைப் புலப்படுக்கும் வியாத்திவாசகத்துக்குப் பொருளாகுபெயராய், அது சினையாகுபெயராய் அவ்வாசகத் துடன்கூடிய சபக்கதிருஷ்டாந்தவசனத்தை யுணர்த்திநின்றது.

இத்திருஷ்டாந்தவசனத்தின்பின் சொல்லற்குரிய உபனயம் நிகமனம் என்னும் உறுப்புக்கள் இங்குச் சொல்லப்படவில்லை. அவை, பின், "ஒட்டிய வுபநய நிகமன மிரண்டுந், திட்டாந் தத்தி லேசேன் றடங்கும்" என்று சொல்லப்படுதலால், அவற்றைத் திட் டாந்தவுறுப்பு ளடக்கி, பக்கம் ஏது திட்டாந்தம் என்னும் மூன்று உறுப்புக்களே போதும் என்றகருத்தால், அவற்றைக் கூறுது விடுத் தார்.

அங்ஙனம் விடுத்தார்க்கு, வியாத்திவாசகத்தால் ஏதுப்பொரு ளுள்ள இடமெல்லாம் துணிபொருளும் உண்டு என்பதை உணர்த்த வேண்டி அவ்வாறுள்ளதொருபொருள் திட்டாந்தமாகக்காட்டப் பட்டமையால் ஏதுப்பொருளுள்ள பக்கப்பொருளிலும் துணி பொருளுண்டென்பது போதரும் என்பது கருத்தாகக்கொள்க.

மேல் வைதன்மியதிருஷ்டாந்தவசனம் சொல்லப்படுகிறது: '.........யாதொன் றநித்தமல் லாதது, பண்ணப் படாததா காசம் போலெனல், விபக்கத் தொடர்ச்சி மீட்சிமொழி யென்க' என்று.

இதன்பொருள்: எது எது நித்தப்பொருளோ அது அது முயற்சியாற்பண்ணப்படுவதன்று; ஆகாசம்போல' என்று கூறுதல் சாத்தியசாதனதன்மங்களுக்கு இடனுகாத விபக்கவியாத்தியுடன் கூடிய வைதன்மியதிருஷ்டாந்தவாசகமாம் என்றவாறு.

பொருள்நோக்கம்பற்றி வினைவை அடுக்காக்கி அதற்கிசையச் சுட்டடுக்கு வருவித்துப் பொருளுரைக்கப்பட்டது.

'சத்தம் அநித்தம்' என்று துணிபொருள்கூறினமையால் அத் துணிபொருளின்மையைத் தெளிவாகக்காட்டவேண்டி அநித்தமல் லாதது என்றுராயினும் நித்தம் என்பது அதன்பொருளாயிற்று.

ஆகாசத்தின்கண், துணிபொருளாகிய அநித்தத்தன்மைக்கு மாறுன நித்தத்தன்மையும், ஏதுவாகிய பண்ணப்படுதற்கு மாறுன பண்ணப்படாமையும் உண்மையால், அவ்வாகாயம் வைதன்மிய திட்டாந்தமாயிற்று.

விபக்கத்தொடர்ச்சி - வியதிரேகவியாப்தி. மீட்சிமொழி- இன்மைமொழி; அதாவது: வியதிரேக திருஷ்டாந்தவாக்கியம் என்பதாம். ஆகவே சாத்தியசாதனதன்மங்களின் இன்மையைக் காட்டும் வியதிரேகவியாத்திவாசகத்துடன்கூடிய வைதன்மிய திருஷ்டாந்தவாசகம் என்பது போந்தபொருளாயிற்று.

இவ்வாறுக மணிமேகலையுட் சொல்லப்பட்டு இப்பொழுது காணப்படாதனவாய காரியகாரணசாமானியானுமானங்களின் வரலாறு, வேறுதாரணங்களாலும், மணிமேகலையிற் காணப்படும் சில அடிகளாலும் ஆராய்ந்து ஒருவாறறிவிக்கப்பட்டது.

இனி, நியாயநூல்களிலும் நியாயப்பிரவேசத்திலும் காணப் படாமல் அருகித்தோன்றும் அனன்னுவயானுமானம் ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது. அது இனி ஆராயப்படும்.

திரு. நாராயணையங்கார்,

பத்திராசிரியர்.

---

# கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[௧0௬-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

## தெற்குத்தவிர மற்றைத்திசைகளுக்குச் சென்றவர்கள் திரும்பிவந்து சீதையைக் காணவில்லையென்று தெரிவித்தல்

சுக்கிரீவன், சீதையைத் தேடும்படி வானரசேனைகளை நாலு திசைகளுக்கும் அனுப்பியபின், கிட்கிந்தைமலையில் இராமனுக்குத் தேறுதல்வார்த்தைகள்கூறிக்கொண்டிருந்தான். தெற்குத்திசை தவிர மற்றைத்திசைகளுக்குச் சென்றவர்கள் திரும்பிவந்து சீதையைக் காணவில்லையென்று இராமசுக்கிரீவருக்குத் தெரிவித்தார்கள்.]

## இராமன், சீதைபிரிந்த துன்பந் தாங்கமாட்டாமல் மூர்ச்சிக்குந்தோறும் சுக்கிரீவன் தேற்றத் தெளிவானுய்ப் பலமுறை சேத்துப் பிழைப்பான் போலல்.

132 கார்வரை இருந்தஅக் கதிரின் காதலன்,
சீரிய சொற்களால் தெருட்டச், செங்கணுன்
ஆருயிர் ஆயிரம் உடைய னுமெனச்
சோர்தொறும் சோர்தொறும் உயிர்த்துத் தோன்றினன்.

இ-ள். இராமன் (சீதை பிரிவாற்ருமையால் உயிர் நீங்கினன் போல்) மயங்கி மூர்ச்சிக்குந்தோறும் சுக்கிரீவன் சிறந்த (தேறுதல்) வார்த்தைகளால் தெளிவிக்கப் (பார்த்தோர் இவன் பலமுறை உயிர் நீங்கி மீள்கின்ருனுதலால்) பல உயிர்களுடையான்போலுமென்று சொல்லும்படி உயிர்பெற்று எழுந்தான்.

கார் - கருமை; மேகம். வரை - மலை. கதிர் - சூரியன். காதலன் - மகன். சீரிய - சிறந்த. தெருட்டல் - தெளிவித்தல். செங்க(ண்)ணுன் - சிவந்த கண்களையுடையவன்; இராமன். ஆம் என - போலும் என்று சொல்லும்படி. சோர்தல் - மூர்ச்சித்தல். உயிர்த்தல் - உயிர்பெற்றெழுதல்.

கார்வரை இருந்தனன், பாடபேதம்.

இராமன் பலமுறை மயங்கித் தெளிந்ததைப் பலமுறை செத்துப்பிழைத்ததாகவும், இறந்த உயிர் திரும்பாதாதலால் அவன் பலமுறை யிறந்து பிழைத்தற்கு அவனுக்குப் பல உயிருண்டு போலுமென்பதாகவும் கூறிய நயம் கொண்டாடத்தக்கது.

### சீதையை அநுமான் காண்பானெனும் நம்பிக்கையினுல் இராமன் இறவாதிருத்தல்.

133 தண்டலில் நெடுந்திசை மூன்றும் தாயினர்
கண்டிலர் மடந்தையை என்னும் கட்டுரை
உண்டுயிர் அகத்தென ஒறுக்க வும்,உளன்,
திண்திறல் அநுமனை நினையும் சிந்தையான்.

இ-ள். (கிழக்கு மேற்கு வடக்கு ஆகிய) மூன்று திக்குக்களிலும் சென்ற வானரர் சீதையைக் காணவில்லையென்று சொன்ன சொல் வருத்தஞ்செய்யாநிற்கவும், இராமன், அநுமா(ன் சீதையைக் காணக் கூடியவனென்று அவ)னை நினையும் மனமுடையவனுய் (அந் நினைவினுல் நம்பிக்கைகொண்டு உயிரை விடாதிருந்ததனுல்) உயிர் (போய்விடவில்லை) உள்ளேயிருக்கிறதென்று (சொல்லும்படியான அம்மாத்திரையே உயிருடையானுக) இருக்கின்ருன்.

தண்டுதல்-தடைப்படுதல். நெடுமை - பெருமை. தாயினர் - தாவினர் (விரைந்து சென்றனரென்றபடி). மடந்தை - பெண் - சீதை. கட்டுரை - உறுதிச்சொல். ஒறுத்தல் - வருத்துதல். திண்மை - வலிமை. திறல் - வலிமை. திண்திறல் - மிக்கவலிமை. 'அகத்து (-உள்ளே) உயிர் உண்டு' எனற்பாலது, செய்யுளாதலால் 'உண்டு உயிர் அகத்து' என அடி தலைமாறிநின்றது. 'ஒறுக்கவும் உயிர் உண்டு (-உளது) என' என்று கூட்டாது 'உயிர் உண்டென (-உண்டாலென - உண்டாற்போல) ஒறுக்கவும்' என்று கூட்டலுமாம்.

### தென்றிசைசென்ருர் திரும்பாமை, மரணத்தாலோ, மற்றேதனுலோ என, இராமன் வினவல்.

[இராமன், துன்பம் மேலிடச் சுக்கிரீவனைநோக்கிச் "சீதையைத் தேடச்செய்த முயற்சி பயன்படவில்லை, அவளைத் தேடித்

தென்றிசைக்குச் சென்றவர்கள் திரும்பவில்லை. அவர்கள் திரும்புதற்குக் குறித்த கால எல்லை கடந்துவிட்டது. அவர்கள் செத்துப் போனார்களோ? சாகவில்லையானால், அவர்களுக்கு வேறு ஆபத்து யாது நேர்ந்ததோ? 'அவள் மாண்டனள். மாண்டவார்த்தையை மீண்டுபோய்க் கூறுதலினும் நாமும் மாண்டொழிதல் நன்று' என்று மாண்டார்களோ? இராக்கதரை எதிர்த்துப் பொருது இறந்து வீர சுவர்க்கமடைந்தார்களோ? இறவாராய்ச் சிறைப்படுத்தப்பட்டார்களோ? தவணைகழிந்தபின் திரும்பிப்போய்த் தண்டனையடைதலினும் தவஞ்செய்தல் சிறந்ததென்று தவஞ்செய்கின்றார்களோ? அவர்கள்நிலைமையைச் சொல்லு" என்றான்.

## அங்கதனுதியர் மதுவனத்தை அழிக்கின்றனரெனத் ததிமுகன் சுக்கிரீவனிடம் சொல்லல்.

அப்போது, ததிமுகன், தலையினின்று இரத்தம் வடியவந்து, சுக்கிரீவன்காலில் விழுந்து, தொழுது எழுந்து, கூப்பியகையனாய் 'மதுவனம் முழுவதும் இன்றே அழிந்திடும்' என, 'அழிப்பார் ஆர்?' என, 'நீலனும் குமுதனும் சாம்பவானும் சேனையோடு வந்து மதுவனத்தை அழித்தலைக்கண்டு தடுத்த நம் சேனையை, அங்கதன், அப்புறப்படுத்தி உன்னை இகழ்ந்துபேச, யான் பொறுக்காமல் ஒரு பாறையை எறிய, அதனை அவன் புறங்கையால் அகற்றிவிட்டு, என்னைப் பற்றி இரத்தங்கக்கக் குத்திச் "சுக்கிரீவனிடம் போய்ச் சொல்" என்று சொன்னான்' என்றான்.

## கற்புடையளாய்ச் சேமமாய்ச் சீதை யிருக்கிறாளென்று சுக்கிரீவன் இராமனுக்குச் சொல்லுதல்.

உடனே, சுக்கிரீவன், எழுந்துநின்று, இராமனைக் கும்பிட்டுக் 'கற்புடையளாய்ச் சேமமாய்ச் சீதாதேவி யிருக்கும் நற்செய்தியை அவர்கள் நடக்கை அறிவிக்கின்றது. தேவியைக் கண்டவர்கள் களிப்பினால் மதுவனத்தை அழித்துத் தேனைக் குடித்தார்கள்'என்றான். பின்பு, ததிமுகனைநோக்கி 'உனக்கு ஓர் உறுதிச்சொல் உரைக்கின்றேன்: கேள். அங்கதன், அற்பத்தொழில்செய்பவனல்லன். தேவியைத் தேடிக் கண்டுபிடிப்பதாகிய செயற்கரிய செயலைச் சித்திபெறச்செய்தவர்கள்திறத்தில், நாம் அருமை

பாராட்டக்கடவேம். அன்றியும், அங்கதன் அரசனுதலால், அவ னேடு மாறுபடலாகாது. அவனைச் சரணடைவாயாக' என்முன்.

### சுக்கிரீவன் ஆணைப்படி அங்கதனைத் ததிமுகன் சரணடைதல்.

ததிமுகன், சுக்கிரீவனை வணங்கித் 'திருவுள்ளப்படி செய்கின் றேன்' என்று விடைபெற்றுச்சென்று மதுவனத்தை அடைந்தான். அவனைக் கண்ட அங்கதன், 'இன்னும் எதிர்ப்பானுனல், கொன் றிடுவேன்' என்று நினைந்தான். ததிமுகன் தூரத்தே வரும் போதே, 'தொண்டன்' என்று சொல்லித் தொழுதுகொண்டு வந்து, 'வெட்டினுற்போல அடியேன்செய்த குற்றத்தை மன்னித் தருள்க' என்று அடியற்ற மரம்போல விழுந்து வணங்க, அங் கதன், குனிந்து, அவனை வாரியெடுத்து மார்புறத் தழுவி 'நான் செய்த குற்றத்தைப் பொறுப்பாயாக' என்று உபசாரவார்த்தை கூறினுன்.

### வெயில் வெப்பம் தணியுமுன்னே, அனுமான், இராமனுக்குச் சீதைசேமம் தெரிவிக்கச் செல்லல்.

'இன்னும் இராமபிரான் துன்புறுவண்ணம் நீர் முன்னுகச் சென்று "சீதாதேவி சேமமாயிருக்கின்முள்" என்று தெரிவிப்பீ ராக' என்று எல்லாரும் கூற அனுமான் போனுன்.

### வெயில் தாழ்ந்தபோது அங்கதனுதியர் இராமசுக்கிரீவரைக் காணச் செல்லல்.

ததிமுகன்மீதுகொண்ட கோபந் தணிந்த அங்கதன், வெயி லின் தாபந் தணிந்த மாலைவேளையில் 'நாம் இராமசுக்கிரீவரைக் காணப் புறப்படுவோம்' என, எல்லாரும் போகலுற்முர்கள்.

### அனுமான் வருதலை இராமன் காணுதல்.

இராமன், 'தென்றிசைநின்று திரும்பிய சேனைவீரர் சீதை யைக் கண்டோமென்பரோ, வேறு கூறுவரோ?' என்று சுக்கிரீவனை வினவிய அதே சமயத்தில், அனுமான், தெற்கே சூரியன் உதய மாவதுபோலத் தோன்றினுன். அவனை இராமன் அன்புகூர நன்கு நோக்கினுன்.]

அனுமான், இராமனை வணங்காமல், சீதை
(யிருந்த திசை) யைநோக்கி வணங்குதல்.

134 எய்தினன் அனுமனும்: எய்தி, எந்தைதன்
மொய்கழல் தொழுகிலன், முளரி நீங்கிய
தையலை நோக்கிய தலையன், கையினன்,
வையகம் தழீஇ,நெடி திறைஞ்சி வைகினன்.

இ-ள். அனுமான், (இராமனிடம்) வந்துசேர்ந்து, இராமன் பாதங்களை வணங்கானாய், சீதை(யிருந்த திசை) யை நோக்கி (வணங்கி) ய தலையும் கையும் உடையவனாய், பூமிபடிய விழுந்து நெடுஞ்சாண்கிடையாய் வணங்கிக்கிடந்தான்.

எய்தல் - அடைதல். எந்தை - என் தந்தை: கவிக்கூற்றாய் இராமனைக் குறித்தது. மொய் - வலி. கழல் - கால். மொய்க் கழலெனற்பாலது எதுகைநோக்கி மொய்கழலெனநின்றது. முளரி - தாமரை. தழீஇ - தழுவி. வையகம் தழீஇ - பூமியிற் படிய விழுந்து. நெடிது இறைஞ்சுதல் - சாஷ்டாங்கமாக நமஸ்கரித் தல். வைகுதல் - தங்குதல்; வணங்கியவன் உடனே எழுந்திடா மல் சிறிதுநேரம் வணங்கியபடியே கிடந்தானென்பதுகுறித்தது. எய்தி ஏந்தல், இறைஞ்சி வாழ்த்தினன், பாடபேதங்கள்.

நான்குதிசைகளுள் வடக்கொழிந்த முத்திசைகளில் எத் திசைமுகமாகவோ வீற்றிருந்து, அனுமான் தெற்கேயிருந்து வருகையை எதிர்பார்த்து, அத்திசையை நோக்கியவண்ணமா யிருந்த இராமனைக் காணவந்த அனுமான், கண்டபோது, அவனைப் பிரிந்திருந்த சீதையை நினைந்து, அந் நினைவின் ஆவேசத்தினால், அவன்காலில் விழுந்து வணங்குவதை மறந்து, அவள்பால் வைத்த பத்தி மேலிடப் பரவசமாகி, இராமனுக்கு முதுகுகாட்டு கிறோமென்ற எண்ணமில்லாமல் வடக்குமுகமாக வந்தவன் தெற்கு முகமாகத் திரும்பித் தலைவணங்கிக் கைகூப்பி, இறைவனை இராமனுக்கு எதிரே கால்நீட்டும் அத்தியந்த அபராதஞ்செய்கிறோ மென்ற பிரஞ்ஞை சிறிது மின்றிச் சீதாத்தியானபரனாய்ப் பூமியில் அடியற்றமரம்போல விழுந்து சாஷ்டாங்கமாக வணங்கிக் கிடந்தான் என்பது கருத்து. அனுமான் இராமனை வணங்காமல் சீதையை

அவளிருந்த திசைநோக்கி வணங்கியது, அவள் கற்பு நீங்காமல் சேமமாயிருக்கிறுளென்பதைச் சொல்லினுல் உணர்த்துமுன் குறிப்பிறைலுணர்த்தக்கருதி யென்று கூறுவாருளர். அவன் அவ்வாறு கருதவில்லையாயினும், கருதினுற்போலவே, அவனது அவசச்செயல்கள் சீதையின் கற்பையும்சேமத்தையும்தெரிவித்தமை தெளிவாம்.

எல்லாம் அறியவல்ல இராமன், அனுமான் தனக்கு நேரே கால்நீட்டித் தன்பத்தினியை வணங்கியது தன்னை நேராக வணங்குதலினும் சிறந்ததென்றும் அனுமானது உடம்பின் அபசாரச் செயல் அவனது உள்ளத்தின் உபசாரச்செயலைச் சிறப்பித்ததென்றும் ஊகித்துணர்ந்தானென்பது ஆராய்ந்து அறியத்தக்கது. அதிமேதாவியான அனுமான், தான், அறியாமல் இராமனுக்குச் செய்த அபசாரம், இராமபத்தி காரணமாக ஏற்பட்ட சீதாபத்தி மேலீட்டால் நிகழ்ந்ததென்றுணர்ந்தபோது, தான்வேறு சீதை வேறென்றெண்ணுத இராமன் சீதைக்குச் செய்த வணக்கம் தனக்குச் செய்ததெனக்கொண்டானென்று தெரிந்தானென்பதும் உய்த்துணரத்தக்கது. அதனுல், அனுமான், சீதையை வணங்கியெழுந்த பின், இராமனுக்குச் செய்யத்தவறிய வணக்கத்தைச் செய்தானென்று கூறப்படவில்லை.

அனுமான்செயல்களால், சீதை சேமமாயிருத்தலையும்
கற்புடைமையையும் இராமன் ஊகித்துணர்தல்.

135 திண்திறல் அவன்செயல் தெரிய நோக்கினுன்,
வண்டுறை ஓதியும் வலியள், மற்றிவன்
கண்டதும் உண்டவள் கற்பும் நன்றெனக்
கொண்டனன், குறிப்பினுல் உணருங் கொள்கையான்.

இ-ள் (முகம் முதலிய அவயவங்களின் தோற்றஞ் செயல்களாகிய) குறிப்புக்களினுல் (உள்ளத்தினுள்ளே நிகழ்வதைத்) தெரிந்துகொள்ளும் திறமையுடைய இராமன், அனுமானுடைய (வழக்கமல்லாத அசாதாரணமான) செய்கையை நன்ருக(க் கவனித்து)ப்பார்த்தான்: (பார்த்துச்) 'சீதை சேமமாயிருக்கிறுள்; இவன் அவளைக் கண்டதுண்டு; அவள் கற்புநிலை கலங்கவில்லை' யென்று தெரிந்துகொண்டான்.

திண்மை - வலிமை. திறல் - வலிமை. திண்திறல் - மிக்க வலிமை. உறைதல் - தங்குதல். ஓதி - கூந்தல். வண்டு உறை ஓதி - வண்டு தங்கும் கூந்தல் (உடையாள்) - சீதை. வலியள் - திடமாயுள்ளவள் - (தேக)பலம் குறையாமல் (சுகமாக) இருக்கின்றவள். கொள்கை, கோட்பு என்பதுபோல வலிமையென்னும் திறமையை உணர்த்திநின்றது. வண்டறல் ஓதியும் பாடம்.

சீதை இறவாது சேமமாயிருந்தாலன்றி அவளைக் காணக்கூடாமைபற்றி 'வலியள்' என முதலாவதாகவும் அவளைக் கண்டாலன்றி அவள் கற்புநிலை கலங்காதவளோ கலங்கினவளோவென்பது அறியக்கூடாமையினல் அவளை அனுமான் கண்டதைக் 'கண்டதும் உண்டு' என இரண்டாவதாகவும் அவளை வணங்குதலால் அவன் அவள்கற்பின் தூய்மையை அறிந்ததைக் 'கற்பும் நன்று' என மூன்றுவதாகவும் இராமன் ஊகித்துணர்ந்தானென, அவனுடைய எண்ணநிகழ்ச்சிகளை நிகழ்ந்தமுறைப்படியே கவி கூறியிருத்தல் கவனிக்கத்தக்கது.

## அனுமான், கற்பலங்காரியாய்ச் சேமமாயிருக்கும் சீதையைக் கண்டேனெனல்.

136 'கண்டனன் கற்பினுக் கணியைக், கண்களால்,
தெண்டிரை யலைகடல் இலங்கைத் தென்நகர்.
அண்டர்நா யக,இனித் துறத்தி ஐயமும்
பண்டுள துயரும்'என் றனுமன் பன்னுவான்.

இ-ள். அனுமான், (இராமனைநோக்கித்) தெய்வநாயகனே, கற்பலங்காரி(யாகவுள்ள சீதாபிராட்டி)யை இலங்கையிலே என் கண்களால் (பிரத்தியட்சமாகக்) கண்டேன். முன் (அவள் உயிரோடிருக்கிறுளோ, உயிரோடிருந்தாலும் கற்புடனிருக்கிறுளோ என்றெண்ணி) இருந்த சந்தேகத்தையும் அதனல் உண்டாயிருந்த துன்பத்தையும் விட்டுவிடுவாயாக என்று கூறிப் பின்னுங் கூறுகின்றுன்:—

அணி - ஆபரணம். தெள்திரை அலைகடல் இலங்கை - தெளிவான அலைகள் அலைகின்ற கடல் (சூழ்ந்த) இலங்கை. தென் - தெற்கு; அழகு. தென் நகர் - தெற்கேயுள்ள நகரம்; அழகுடைய நகரம். துறத்தி - துறப்பாய் - நீக்குவாய். இனித் தவிர்தியும் பாடம்.

இராவணன் தனக்கு இணங்கும்படி வணங்கியபோது, சீதை கொடுங்கோபங்கொண்டு கடுஞ்சொற் கூறியதையும் அவள் தற்கொலைசெய்யப் புகுந்ததையும் அநுமான் கண்ணாரக்கண்டதை மனத்துட்கொண்டு தான் சீதைகற்புடைமையை அறிந்தது வேறொருவர் சொல்லக் கேட்டதனாலன்று நேராகக் கண்டதனாலென்று இராமனுக்குத் தெரிவிக்கக்கருதிக் 'கண்டனன் கற்பினுக் கணியைக் கண்களால்' என்றான். 'கூசி ஆவி குலைவுறு வாளையும் - ஆசை யால்உயிர் ஆசழி வானையும் - காசில் கண்ணிணை சான்றெனக் கண்டனன் - ஊசலாடி உளையும் உளத்தினான்' (நிந்தனைப் படலம். உஉ) என்பதைக் காண்க.

'பிராட்டியை என்று முதலிற் கூறினால், அவளது நிலைமை என்னாயிற்றென்றுகூறுவானோ வென்னுஞ் சங்கையினால் இராமனுக்கு மிக்க துன்பமுளதாகக்கூடு மெனக் கருதி, 'கண்டனன்' என முதலிற் கூறினன் அநுமான்; ஸ்ரீவால்மீகிராமாயணத்தில் "த்ருஷ்டா ஸீதா" என வருதலுங் காண்க. 'கண்டனன்' என்றதை யடுத்து 'கற்பினுக்கணி' என்று கூறியதன் காரணம் தானே விளங்கும்; அவள் கற்பிற் சிறவாதிருப்பின், அவளைக் கண்டது பயன் படாமையுணர்க..........கற்பினுக் கணியைக் கண்டேனென்றது- அந்தச் சீதாபிராட்டி உன்னைப் பிரிந்து சிறைப்பட்டிருக்கின்ற அங்குக் கண்களினின்று நீரைத் தாரைதாரையாகப் பெருக்கிக்கொண்டிருப்பதனால், அவள் கற்பினுக் கணியாவளென்பதை யுணர்ந்தேனென்றவாறு: கற்புக் கெட்டிருப்பின் துயர்க்குக் காரணமில்லையாதலால், இவ்வாறு கூறியது: "கலங்குதெண் டிரையிற் றூய கண்ணிணீர்க் கடலிற் கண்டேன்" என மேல்வருவதும், "அழுவ தல்ல தயலொன்றுஞ் செய்குவ தறியாள்" என்றதுங் காண்க.' வை. மு. கோ.

சீதை இராமன்தேவியாகவும் தசரதன்மருமகளாகவும் சனகன் மகளாகவும் இருத்தற்கு ஏற்ற தகுதி மிகுதியாக உடையாளேனல்.

137 'உன்பெருந் தேவி யென்னும் உரிமைக்கும் உன்னைப் பெற்ற
மன்பெரு மருகி யென்னும் வாய்மைக்கும் மிதிலை மன்னன்
தன்பெருந் தனயை யென்னும் தகைமைக்கும் தலைமை சான்றாள்,
என்பெருந் தெய்வம்; ஐயா, இன்னமுங் கேட்டி' என்றான்.

இ-ள். 'சுவாமி, எனக்குச் சிறந்த தெய்வமான சீதாபிராட்டி, உனது கோப்பெருந்தேவியென்ற உரிமைப்பாட்டுக்கும் தசரத சக்கரவர்த்திக்கு முதல் மருமகள் என்ற (பிரபல) வார்த்தைக்கும் சனகமகாராசனது பிரதானபுத்திரியென்னும் தகுதிக்கும் (ஏற்ற) சிறப்புமிகுந்தவள். (அவள் பெருமைக்குணங்கள் இவ்வளவில் அடங்கவில்லை) இன்னமும் கேட்பாயாக' என்று (அனுமான் தொடர்ந்து) கூறுகின்றான்.

மன் - அரசன். மருகி - மருமகள். வாய்மை - வார்த்தை. தனயை - மகள். தகைமை - தகுதி. தலைமை - முதன்மை- மேன்மை-சிறப்பு. சான்றாள் - மிகுந்தாள். கேட்டி - கேட்பாயாக.

சீதை, மனைவியாகவும் மருமகளாகவும் மகளாகவும் உள்ள நிலைகளில் ஒப்பு ஒருவருமின்றி உயர்வற உயர்ந்து முதன்மையுற்று விளங்குகின்றாளென்பது கருத்து.

இந்தக்கவியில், சீதை, தனக்கு உறவினரான உயர்பெருந் தகையாளர்க்குத் தான் உறவினளாயிருத்தற்குச் சிறந்த தகுதியைக் கடுஞ்சோதனைக்குள்ளானகாலத்தில் கற்புநிலை கலங்காதிருந்ததனால் மிகுதியாகப் பெற்றாளென்பது கூறப்பட்டது. அடுத்தஇரண்டு கவிகளில், அவள் தனக்கும் தனக்கு உரியோரான மேலோர்க்கும் கீழோர்க்கும், தன் கற்புநிலைகாரணமான சிறந்த பெருமையை அளித்தாளென்பது கூறப்படுகின்றது.

சீதை கடுந்துன்பத்தைப் பொறுத்துக் கற்பைக் காத்தலால், தனக்குத் தன்னையே நேராக்கிக் கணவனான இராமனுக்கு அவனையே நேராக்கித் தொண்டனான அனுமானுக்கு அவனையே நேராக்கினாளெனல்.

138 'பொன்னலதில்லைப்பொன்னை ஒப்பெனப்,பொறையில்நின்றாள்,
தன்னல தில்லைத் தன்னை ஒப்பென; தனக்கு வந்த
நின்னல தில்லை நின்னை ஒப்பென நினக்கு நேர்ந்தாள்;
என்னல தில்லை என்னை ஒப்பென எனக்கும் ஈந்தாள்.'

இ-ள். 'சீதாதேவி, பொன்னுக்கு ஒப்பான பொருள் பொன்னையல்லது வேறில்லையென்பதுபோலத் தனக்கு ஒப்பாவார் தன்னையல்லது வேறொருவருமில்லை யென்னும்படி பொறுமைக் குணத்தில் நிலைத்துநின்றாள்; தனக்கு(க் கொழுநனாக) வாய்த்த உனக்கு ஒப்பாவார் உன்னையல்லது வேறொருவருமில்லையென்னும் படி உனக்கு(ப் பிரசித்தியைக்) கொடுத்தாள்; (தொண்டனான) என்னை ஒப்பவர் என்னையல்லது வேறொருவருமில்லையென்னும்படி எனக்கும் (வரம்) அருளினாள்.

பொறை - பொறுமை. நேர்தல் - கொடுத்தல். பொன்னை யொப்பன, தன்னையொப்பவர், நுன்னையொப்பவர், உன்னையொப் பவர் என்பனவும் பாடம்.

இராமனைப் பிரிந்து அடைந்த சொல்லற்கரிய துன்பங்களைச் சீதை ஆச்சரியகரமாகப் பொறுத்ததைக் கருத்துட்கொண்டு, இங்கே, அனுமான்கூற்றாகப் 'பொறையில் நின்றாள்' என்ற கம்பர், முன், கவிக்கூற்றாகச் சீதையை 'உமையா ளொக்கும் மங்கையர் உச்சிக் கரம்வைக்கும் கமையாள்*' என்று கூறியிருப்பதும் இனி, இப்படலத்தில் 'விற்பெருந் தடந்தோள்' என்ற பாட்டில் விதந் தெடுத்துக்கூறும் சீதையின் சிறந்தகுணங்களுள் நடுநாயகமாக அவளது 'இரும்பொறை'†யைக் கூறுவதும் கவனிக்கத்தக்கவை.

கம்பர் சீதையின் குணங்களுள்ளே பொறுமைக்குணத்தைப் பல இடங்களில் சிறப்பாகக் கூறியதன் காரணம், அவள், 'அகழ் வாரைத் தாங்கும் நிலம்' எனப் பொறுமைக்குச் சிறந்த உவமான மாகவுள்ள பூமியின் அதிதேவதையான பூதேவியின் அமிசமாய்ச் சனகமகாராசன் யாகஞ்செய்தற்கு உழுத படைச்சாலில் பூமியுள் ளிருந்து தோன்றியதுபோலும்.

---

* மிதிலைக்காட்சிப்படலம், உகு. கமை - பொறுமை.

† இருமை - பெருமை. பொறை - பொறுமை. இரும்பொறை - மகத் தான பொறுமை.

செம்புமுதலிய வேறுலோகக்கலப்புற்ற தங்கத்தைப் புடத்தி லிட்டால், தன்னேடு கலந்திருந்த உலோகங்களெல்லாம் எரிந் தொழிந்துபோகத் தனியாகித் தங்குவது தங்கமே. (அதனல், நோக்குதலென்னும் பொருளுடைய நோக்கம்போலத் தங்கம், தங்குதலென்னும்பொருளுடையதாய்ப் பொன்னுக்கு ஒரு பெய ராயினதுபோலும்.) புடச்சோதனையைப் பொறுக்கமாட்டாது மற்றெல்லா உலோகங்களும் நிலையாதொழியப் பொன் ஒன்றே பொறுத்து நிலைகெடாதிருத்தல்போல, மற்றெல்லாமக்களும் பொறுக்கமாட்டாமல் நிலைகெட்டொழியும்படியுள்ள துன்பச் சோதனையைப் பொறுத்து நிலைகெடாதுநின்ருள் சீதையென்பது முதலிரண்டடிக்கருத்து.

பொறுமைக்கு நிலைப்பிடமாய், அதனல் தானன்றித் தனக்கு நிகரில்லாதவளான சீதை, தனக்கு நாயகனுகப்பெற்ற இராமன் அப்படிப்பட்ட மனைவியைப்பெருத மற்றைய ஆடவரெவரும் ஒப்பாகாது தனக்குத் தானே ஒப்பாகும் பிரசித்தியைப் பெறச் செய்தாளென்பது மூன்ரும் அடிக்கருத்து.

அனுமான், 'ஊழி ஓர் பகலா ஓதும் யாண்டெலாம் உலகம் ஏழும் ஏழும் வீவுற்ற ஞான்றும் இன்றென இருத்தி' என்று சீதை தன்னை வாழ்த்தித் தொண்டாருருள்ளே தன்னையன்றித் தன்னையொப் பவரில்லையென்னும்படி தான் சிரஞ்சீவியாகும் வரம் தந்தாளென்ரு னென்பது நான்காமடிக்கருத்து.

சீதை தன்னைச் சார்ந்தார்க்கு மேன்மையும் பகைத்தாருக்குக் கேடும் உண்டாகச்செய்தாளெனல்.

139. 'உன்குலம் உன்ன தாக்கி, உயர்புகழ்க் கொருத்தி யான
தன்குலம் தன்ன தாக்கித், தன்னை இத் தனிமை செய்தான்
வன்குலம் கூற்றுக் கீந்து, வானவர் குலத்தை வாழ்வித்
தென்குலம் எனக்குத் தந்தாள், என்இனிச் செய்வ தெம்மோய்!'

இ-ள். 'எங்கள் மாதாவான சீதாதேவி, உன்னுடைய குலம் (இக்ஷ்வாகுகுலம், ரகுகுலம், ககுஸ்தகுலம் என வழங்குதலொழிந்து) இராமகுலம் (என வழங்கும்படி) ஆகச்செய்து, தனது குலம் (சனககுலமென்பது தவிர்ந்து) சீதைகுலம் (என்னும்படி) ஆகச்செய்து, தன்னை (உன்னைவிட்டுப் பிரித்து)த் தனியளாகும்படி செய்த இராவணனது இராட்சசகுலத்தை எமனுக்குக் கொடுத்து (மாளச்செய்து), தேவர்குலத்தை வாழச்செய்து, எனது வானர குலத்தை (அனுமான்குலமென என்பேரால் வழங்கச்செய்து) எனக்கு(ப் பெருமை) ஈந்தாள். (அவள் செய்த, இப்படிப்பட்ட அருமையான செயல்களினும் சிறந்த செயல்) யாது இனிச் செய்தற் கிருக்கின்றது!'

கூற்று - எமன். மோய் - தாய். ஒருத்தியாய, இத்தன்மை செய்தான், செய்த மன்குல மறலி, வானவர் குலமுங்காத்தின்று, செய்வதம்மா என்பன பாடபேதங்கள்.

புகழ்களில் தன்னை யொத்ததும் தன்னின் மிக்கது மில்லாத தாய் உயர்ந்த புகழை வேறெவரோடும் பங்கிடாது தானொருத்திக்கே தனியுரிமையாகப்பெற்ற என்ற விரிவான பொருளை 'உயர்புகழ்க் கொருத்தியான' எனச் சுருங்கச்சொல்லி விளங்க வைத்த நயம் மிகவும் பாராட்டற்பாலது.

சீதையின் அருங்குணங்களும் அரிய செயல்களும் அவளை மேம்படுத்தியதன்றி அவளைச் சார்ந்தாரையும் மேன்மையுறச் செய்ததென்பது கருத்து.

[தொடரும்.]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

# மாறனலங்காரத்திலுள்ள சிலசெய்திகள்.

## 1. திருவழுதிவளநாடு.

இது, தென்தமிழ்நாட்டில் தண்பொருநல் (தாம்பிரபர்ணி) யாற்றின் கரையில் ஆழ்வார்திருநகரியைப் பேரூராகக் கொண்டது; யாற்றின் இருகரைகளிலும் ஒருகாதநீளமும் அரைக்காதவகலமுமுள்ளதாயிருந்தது. வழுதியென்பது பாண்டியரின் பெயர். சங்ககாலப்பாண்டியரிற் சிலரே வழுதியென்ற பெயர் பெற்றிருந்தனர். இரண்டாயிரம்யாண்டுகளுக்குமுன்பிருந்தே இந்நாடேற்பட்டிருக்கலாம்; இல்லாவிட்டால் சேந்தன் (ஸ்ரீஜயந்தன்) மாறன் காலத்திலிருந்து இப்பெயர் பெற்றிருக்கலாம். சடகோபர் தம்மை 'வழுதிநாடன்' என்றும் 'வழுதிவளநாடன்' என்றும் கூறுகிறார். சங்ககாலத்தில் வளநாடென்று பெயரிருந்ததாகத் தெரியவில்லை. பிற்காலத்தில் வளநாடு என்ற பெயர்வழக்கு உண்டு. வழுதிநாடென்ற பெயரே முன்பு இருந்திருக்கலாம். பின்னர் ஆழ்வார் காலத்தில் வழுதிவளநாடாய் அதன்பின் திருவழுதிவளநாடாயிருக்கலாம்.

## 2. பொருநல் (பொருநை.)

சடகோபர் பொருநல்யாறென்றுரைக்கிறார். நம்பியகப்பொருட்பாயிரமும் மாறனலங்காரமும் பொருநையென்று கூறுகின்றன.

## 3. செம்பொன்மாடத்திருக்குருகூர்.

தண்பொருநையின் வடபாலுள்ள காரியார் உறையுள் 'செம்பொன்மாடத்திருக்குருகூர்' என்பது, தென்றிருப்பேரைக் காரிரத்தினகவிராயர் உரை. இது ஆழ்வார்திருநகரிக்குக்கிழக்கே யாற்றின் வடகரையில் உள்ள அப்பன்கோயிலாகும். அப்பன்=ஆழ்வார் தந்தை காரிமன்னர். கோயில்=உறையுள். இங்கு ஆழ்வார், வைகாசிவிசாகத்துக்கு இரண்டுநாட்களுக்குமுன் எட்டாம்விழாவில் சென்று கண்ணன்கோலங்கொள்ளும் வழக்கமுண்டு. இங்கே 'காரிமாறன்களம்' என்று ஒரு நெற்போர்க்களமிருக்கிறது.

இவ்வூருக்குச் செம்பொன்மாடத்திருக்குருகூர் என்ற பெயர் இப்பொழுதில்லை. ஆழ்வார்காலத்திலும் இருந்திருக்காது. காரிரத்தினகவிராயர்காலத்திலிருந்ததாகக் கூறுகிறார். இப்பெயர் மதுரகவியாழ்வார் பாடிய கண்ணிநுண்சிறுத்தாம்பு ஐந்தாம்பாட்டில் காணப்படுகிறது.

நம்பினேன் பிறர் நன்பொருள் தன்னையும்
நம்பினேன் மடவாரையும் முன்னெலாம்
செம்பொன்மாடத்திருக்குருகூர் நம்பிக்
கன்பனாய் அடியேன் சதிர்த்தே னின்றே.

## 4. திருப்புளி.

தென்னம் பொதியக் தருபொருநைத் தென்கரையின்
மன்னும் புளிக்கீழ் வளர்தருவொன்று—

திருப்புளியின் அடியில் சடகோபர்கோயிலிருக்கிறது. இதைப்பற்றிச் சடகோபர் ஒன்றுஞ் சொல்லவில்லை. மதுரகவிகளும் திருப்புளியைக் குறிப்பிடவில்லை. ஆழ்வாருக்குப் பிற்காலத்தில் புளியினடியில் கோயிலேற்பட்டபிறகே அது சிறந்திருக்கவேண்டும்.

மாறனலங்காரமேற்கோட்பாட்டொன்று இப்புளியைப் புகழ்கிறது.

பரியரைத்தாய்த் திணிவயிரம் பயின்றுநிலங் கிளைமுதற்றாய்
விரிசினைத்தாய்ப் பசுந்தழைத்தாய் விரைமலர்த்தாய் விழைகனித்தாய்ப்
பெரியகதிரவன்மறைந்த பிழம்பிருட்கு முறங்காது
வரிவளையூர் புனற்குருகூர் மகிழ்மாறர் திருப்புளியே.

திருப்புளி பழமையானது. எழுகிளைகளுடன் பெரிதாக வளர்ந்தது. இப்பொழுது அடிமரத்தைக் கிளைகள்வரை மண்ணிட்டு மூடிவிட்டனர். அதனால் எழுகிளைகளும் எழுமரங்கள்போற் காணப்படுகின்றன. இவ்வேலை மாறனலங்காரக்காலமாகிய கொல்லம்யாண்டு 723. (கி. பி. 1547)க்கு முன்பே நிகழ்ந்துவிட்டது. 'நிலம் கிளை முதற்றாய்' என்பதற்கு நிலத்தில் கிளைகளை அடிமரமாகவுடையதாய் எனப் பொருள் கொள்ளவேண்டும். விழைகனித்தாய்—விரும்பும் பழத்தையுடையதாய். இப்பொழுது பழுப்பதில்லை.

ஆனால் 20-யாண்டுகளுக்கு முன்பு ஓராண்டிற்பழுத்தது. அதற்கு முன்னும் பின்னும் பழுக்கவில்லை. இதனை உறங்காப்புளி, பழாப் புளி யென்றழைப்பர். அக்காலத்திற் பழுத்ததுபோலும். இப் பொழுது பலவாண்டுகளுக்கொருமுறை மட்டும் பழுக்குமோ அல் லது வேறெந்தக்காரணத்தையொட்டிப் பழுக்கும்வல்லமையற் றிருக்கிறதோ தெரியவில்லை. இரவில் மற்றப் புளியமரங்களிலுள்ள இலைகள் மடிந்து எதிரெதிரிலுள்ளவை பொருந்திக்கொள்ளும். இம்மரத்தில் இரவும் பகலும் ஒன்றுபோல் விரிந்தேயிருக்கும். அதனால் உறங்காப்புளியென்பர். இது, இப்பொழுதும் பூத்துக் காய்த்து உதிர்ந்துவிடுகிறது. பழுக்கும்வரை மரத்திலிருப்பதில்லை. ஆழ்வார்காலம் ஆயிரத்துநூறுயாண்டுகளுக்கு முற்பட்டதாதலால் இம்மரத்தினுயுளும் ஆயிரத்துக்கதிகமானதேயாகும்.

## 5. சக்கரபாணிநல்லூர்.

இது முதலில் 800-யாண்டுகளுக்குமுன்பு குறிப்பிடப்படு கிறது. குருகூரிலுள்ள ஞானப்பிரான்கோயிலைக் கட்டியவர் செவ் விருக்கைநாட்டுச் 'சக்கரபாணிநல்லூர் அரையன்' வீரமுடித்தா னன பல்லவராயன் என்பவர்.

### கல்வெட்டு.

ஸ்வஸ்திஸ்ரீ: கோ மாறவர்மரான திரிபுவனச்சக்ரவர்த்தி ஸ்ரீ சுந்தரபாண்டியதேவர்க்கு யாண்டு 15-ஆவது: இத்திருமண்டபமும் செய்வித்து ஸ்ரீ வராக நாராயணரையும் உகந்தருளிவித்தான், செவ்விருக்கைநாட்டுச் 'சக்கரபாணிநல்லூர் அரையன்' வீர முடித்தானன பல்லவராயன்.

அதன்பின் நானூறுயாண்டுகளுக்கப்பால் மாறனலங்காரமேற் கோளிலுள்ள பாட்டொன்று குருகூருக்குக் கிழக்கே சக்கரபாணி பேர்புனைபதி இருப்பதாகக் கூறுகிறது.

குருமணி குயின்றபொற் குடமெனத் தகைசால்
பருமணி வடந்தோய்ந் தெழுதரு பணைமுலை;
முலையெனப் பொடித்ததா மரைமுகை; முகைநெகிழ்
பொழுகுதண் ணறவென வுறுநர்நன் மார்பத்
திழுகுமான் மதமளா யெழுபுனற் சங்கணித்
துறைவளங் கெழீஇய தொன்மைசான் மரபி

நீங்கிது புவனம் யாவையுந் தழைத்தற்
கோங்கிய விராமானுஜமுனி யிருக்கை:
யாங்கது தருமமோர் படிவமுற் றனைய
பாங்குறு சக்கர பாணிபேர் புனைபதி:
மழைகிழித் தெழுந்தபொன் மாளிகைச் சூளிகைத்
தழைதுகிற் கொடித்திர டாமவெண் மதியகட்
டுறுமறுத் துடைத்துவா னெரீஇநடங் கூங்குது
முருகார் மொய்ம்மகிழ் மாறன்
குருகா புரியெனக் கூறுநன் னகரே.

இது திருவழுதிவளநாட்டுச் சக்கரபாணிநல்லூராயிருந்தால் கல்வெட்டிற்கண்ட செவ்விருக்கைநாட்டுப் பல்லவராயன் சக்கர பாணிநல்லூர் அரையனுடைய வீரத்தை முடித்திருக்கவேண்டும். இச் சக்கரபாணிநல்லூர் இருந்தவிடம் இப்பொழுதுள்ள முத்தா ரம்மன்கோயிலுக்கும் ஆண்டபெருமாள்பிள்ளை படித்துறைக்கும் கிழக்கேயுள்ள இடமாகும்.

## 6. திருச்சங்கணித்துறை.

சங்கணித்துறை, இராமானுஜர்கோயிலுக்கு மேற்கேயுள்ள பெரிய படித்துறை. ஆழ்வார் 'பொருநல் சங்கணிதுறைவ'னென்று தன்னைக் கூறுகிறார். 'சங்குக ளலங்கரிக்கும் துறையையுடையவன்' என்பது அதன்பொருள். பிற்காலத்தார் சங்கலங்காரத்துறை யெனக்கொண்டனர்.

எல். ஆதிநாதபிள்ளை,
பொன்னமராவதி.

ஸ்ரீ:

# மத்யம வியாயோகம்.

## ஸ்தாபனம்.

(நாந்தியினிறுதியில் ஸூத்திரதாரன் அரங்கத்தில் நுழைகிருன்)

ஸூத்திரதாரன்:—

வாயாஸுஸவொZவஸுரவய ஹெரூஷயாவஸாஷஃ
வாஷொஹரெஃ கூவஷயாமேவஷ நீஷ:।
யஃ வொஷு தஷ்ஹுவ நகூமெண ஈஜ
வெஷமியஸெஂகூமே ஜவாஂவாவஸாமஸு॥

திருமாலினது எந்தத்திருவடியானது, திரிவிக்கிரமாவதாரத்தில், மூன்றுலகங்களையும் அளக்குங்கால், மேலுலகத்தையளப்பதற்காக உயரத் தூக்கப்பெற்று, ஆகாயமாகிய ஸாகரத்தில் வைடூரியமணிகளால் ஆக்கப்பட்ட கோட்டையைப்போல் விளங்கியதோ, அஸுரமாதர்மனத்தில் துன்பம்விளைப்பதாயும், நீலோற்பலம்போல் தெளிவானதாயும், கத்திபோல் கறுத்ததாயுமுள்ள அந்தத் திருவடியானது (நம்மைக்) காப்பதாக.

இவ்விதமாக இங்குக் குழுமியிருக்கும் பெரியோர்களிடம் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அடே! நான் விண்ணப்பம்செய்துகொள்ளச் சித்தமாயிருக்கும்போது, ஏதோ அரவம் கேட்கப்படுகிறதே! ஓ! பார்க்கிறேன்.

(திரைக்குள்) ஓ! அப்பா! இவன் யார்?

ஸூத்திரதாரன்:—இருக்கட்டும், தெரிந்தது.

ஹொஃ ஶஷொவாணாஷஸு
ஷுாஹணொZயஂ நவஸஂஶயஃ।
தூாவஸுதெ நிவிஸஂகெந
கெநஷிஸு வாவவெதஸா॥

இவர் "ஹொ(போ)" என்று அலறினதால் அந்தணரேயாவர்; அதில் ஐயமில்லை; கொடியமனம்படைத்த ஒருவனால் பயமுறுத்தப்படுகிருர்.

*

(திரைக்குள்) ஓ! அப்பா! இவன் யார்?

ஸூத்திரதாரன்:—ஓ! நன்றாய்த்தெரிந்தது; இவன் பாண்டவர்களில் நடுவனின் புதல்வனும் ஹிடிம்பையென்ற அரணியில் தோன்றிய அரக்கத்தீயேயாவன்; தீங்கொன்றும் விளைக்காத அந்தணரொருவரைப் பயமுறுத்துகிறான். ஐயோ! மனைவிமக்களுடன்கூடின அந்த அந்தணன்நிலைமை மிகவும் பரிதாபகரமானது. இங்கேயோவென்றால்:—

ஶ்ராந்தை꞉ ஸுதை꞉ பரிவ்ருதஸ்தருணை꞉ ஸதா³ரோ
வ்ருத்³தோ⁴ த்³விஜோ நிஶிசராநுசரஸ்ய வஶ்ய꞉ ।
வ்யாக்⁴ராநுஸாரசகிதோ வ்ருஷப⁴ஸ்ய தே⁴நு꞉
ஸந்த்ரஸ்தவத்ஸக இவாகுலதாமுபைதி ॥

(இவர்) களைப்படைந்தவர்களான தன் இளங்குமாரர்களால் சூழப்பட்டவரும் மனைவியுடன்கூடியவரும் ஓர் அரக்கனைப் பின்தொடருகிறவருமான கிழவர், புலியைத் தொடர்ந்துசெல்லுகிறதும் பசுவுடன்கூடியதும் நடுநடுங்கியகன்றுகளுடன்சேர்ந்ததுமான எருதுபோல் வருத்தமடைகிறார்.

(ஸூத்திரதாரன் வெளியேசெல்லுகின்றான்)

ஸ்தாபனம் முற்றிற்று.

---

(பிறகு மூன்றுபுதல்வர்களுடனும் மனைவியுடனும் கூடிய கேசவதாசர் என்ற அந்தணரும் அவர்களுக்குப் பிறகு கடோத்கசனும் வருகிறார்கள்)

பெரியோர்:—ஓ! இவன் யார்?

தருணரவிகரப்ரகீர்ணகேஶோ
ப்⁴ருகுடிபுடோஜ்ஜ்வலபிங்க³லாயதாக்ஷ꞉ ।
ஸதடி³தி³வ நவஸ்தநித꞉ ஸமுத்³ரோ
யுக³நித⁴நே ப்ரதிமாக்ருதிர்ஹரஸ்ய ॥

நடுப்பகற்பரிதியின் கதிர்கள்போற் சிதறியிருக்கும் தலைமயிருடனும், வளைந்த புருவங்களின் ஒளியால் பொன்னிறமானவை

யாய் நீண்ட கண்களுடனும், கழுத்தில் பொன்மாலையணிந்து கொண்டு மின்னலுடன்கூடிய மேகம்போல்பவனைப் பிரளய காலத்துருத்திரமூர்த்தியைப்போல் தோன்றுகிறனே!

புதல்வருள் முதலாமவன்:—ஓ! அப்பா! இவன் யார்?

𑌗𑍍𑌰𑌹𑌯𑍁𑌗𑌲𑌨𑌿𑌭𑌾𑌕𑍍𑌷𑌃 𑌪𑍀𑌨𑌵𑌿𑌸𑍍𑌤𑍀𑌰𑍍𑌣𑌵𑌕𑍍𑌷𑌾𑌃
𑌕𑌨𑌕𑌕𑌪𑌿𑌲𑌕𑍇𑌶𑌃 𑌪𑍀𑌤𑌕𑍌𑌶𑍇𑌯𑌵𑌾𑌸𑌾𑌃।
𑌤𑌿𑌮𑌿𑌰𑌨𑌿𑌵𑌹𑌵𑌰𑍍𑌣𑌃 𑌪𑌾𑌣𑍍𑌡𑍁𑌰𑍋𑌦𑌗𑍍𑌰𑌦𑌂𑌷𑍍𑌟𑍍𑌰𑍋
𑌨𑌵𑌜𑌲 𑌜𑌲𑌧𑌲𑍇𑌖𑌾 𑌶𑍀𑌯𑌤𑍇 𑌨𑍍𑌦𑍂𑌰𑍇𑌵𑌃॥

வான்கோள்கள்போன்ற கண்களுடனும், பெருத்து விசாலமான மார்புடனும், பொன்போல் பழுப்புநிறமுள்ள மயிருடனும், மஞ்சள் நிறமுள்ள பட்டுவஸ்திரத்துடனும் விளங்கிக்கொண்டு, இருளின் தொகுதிபோன்ற நிறத்துடனும், வெளுத்த கடைப்பற்களுடனும், சந்திரகலைமறைந்த நீருண்டமேகம்போல் தோன்றுகிறனே!

இரண்டாமவன்:— ஓ! இவன் யாவன்?

𑌕𑌲𑌭𑌦𑌶𑌨𑌦𑌂𑌷𑍍𑌟𑍍𑌰𑌸𑍍𑌤𑍁𑌙𑍍𑌗𑌘𑍋𑌣𑌾𑌗𑍍𑌰𑌨𑌾𑌸𑌃
𑌕𑌰𑌿𑌵𑌰𑌕𑌰𑌬𑌾𑌹𑍁𑌰𑍍𑌨𑍀𑌲𑌜𑍀𑌮𑍂𑌤𑌵𑌰𑍍𑌣𑌃।
𑌹𑍁𑌤𑌹𑍁𑌤𑌵𑌹𑌦𑍀𑌪𑍍𑌤𑍋 𑌯𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑍋 𑌭𑌾𑌤𑌿 𑌦𑍀𑌪𑍍𑌤𑌃
𑌤𑍍𑌰𑌿𑌪𑍁𑌰𑌪𑍁𑌰𑌨𑌿𑌦𑌾𑌹𑍇 𑌶𑌙𑍍𑌕𑌰𑌸𑍍𑌯𑍇𑌵 𑌰𑍋𑌷𑌃॥

யானைக்குட்டியின் கொம்புகள்போன்ற கடைப்பற்களுடனும், கலப்பைபோல் வளைந்த மூக்குடனும், யானைத்துதிக்கைபோன்ற கைகளுடனும், கருமேகம்போலும்நிறத்துடனும், மூட்டப்பட்ட நெருப்பைப்போன்ற ஒளியுடனும், மிகவும் பயங்கரமான தோற்றத்துடனும் முப்புரமெரித்த பரமசிவனுடைய சினம்போலக் காணப்படுகிறனே!

மூன்றுமவன்:—ஓ! அப்பா! இவன் யார்? நமக்குத் துன்பம் விளைக்கிறனே!

வஜ்ரபாதோ(அ)யமத்ரீணாம்
ஶ்யேந: பக்ஷபதத்ரிணாம்।
ம்ருகேந்த்ரோ ம்ருகஸங்காநாம்
க்ருதாந்த: புருஷவிக்ரஹ:॥

பெரியமலைகளுக்கு வச்சிராயுதம் விழுந்ததுபோலவும், பறவைக் கூட்டங்களுக்குக் கழுகுபோலவும், மான்கூட்டங்களுக்குச் சிங்கம் போலவும், யமனே மனித உருவமெடுத்து வந்ததுபோலவும் தோன்றுகிறானே!

பார்ப்பனி:—இவன் யார்? நம்மைத் துன்புறுத்துகிறானே!

கடோற்கசன்:—ஓ! பிராமணரே! நின்மின் நின்மின்.

கிம் யாஸி பயவிநாஶிததைர்யஸாரோ
வித்ருத்ய தாரஸுதரக்ஷணஹீநஸத்த்வ:।
தார்க்ஷ்யப்ரபக்ஷபவநோத்துதரோஷவஹ்நி-
-தீவ்ர: பணீவ ஸஹிதோ புஜகோ பயார்த:॥

அச்சமடைந்த மனைவிமக்களைக் காக்க வலியற்றவனே! என்னைக்கண்டு பயத்தினால் ஊக்கமிழந்தவனே! என் செல்லுகிறாய்? கெருடனுடைய நுனிச்சிறகினால் வீசப்பட்டு மிகவும் சினமடைந்து சீறுகிறதாயும், பயந்த பெண்ணரவுடன் கூடினதாயுமுள்ள பாம்பைப்போல் பயந்து ஓடுகிறாயே.

ஓ! அந்தணரே! போகக்கூடாது, போகக்கூடாது.

பெரியார்:—பிராம்மணி! அஞ்சேல். மக்காள்! பயப்பட வேண்டாம். இவன் வசனம் நன்று தீது என்பவற்றைப் பரிசீலனஞ் செய்வதுபோல் தோன்றுகிறது.

கடோற்கசன்:—ஐயோ! கஷ்டம். இவ்வுலகில் எங்கும் எப்பொழுதும் அந்தணர்கள் தொழத்தக்கவர்களேயென்று நான் அறிவேன். செய்யத்தகாதகார்யத்தை நான் என் அன்னையின் ஆணையால் முன்பின்யோசியாமற் செய்யநேர்ந்ததே. ஐயோ!

பெரியார்:— (மனைவியைநோக்கி) 'அரக்கர்கள்வாசம்செய்யும் கானகம் இது; ஆகையால் ஜாக்கிரதையாக இங்கே செல்லவேண்டும்' என்று தொழத்தகுந்தவரும் ஈரவஸ்திரத்துடன் இருந்தவருமான ஒரு முனிவரால் இயம்பப்பெற்றது உன்நினைவுக்கு வரவில்லையா? மக்காள்! எனக்கு அச்சமே மேலிடுகிறது.

பார்ப்பனி:—இவன் க்ஷத்திரியனைப்போல் காணப்படுகிறானே!

பெரியார்:—பாக்கியமற்ற நான் என்செய்வேன்.

பார்ப்பனி:—சத்தமிடுவோம்.

புதல்வருள் முதலாமவன்:—அம்மா! நாம் எவரைக் கூப்பிடுவோம்?

𑌇𑌦𑌂 𑌹𑌿 𑌸𑌾𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌤𑌿𑌮𑌿𑌰𑍋𑌤𑍍𑌕𑌰𑌾𑌵𑍃𑌤𑍇
𑌨𑌗𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌕𑌾𑌨𑍍𑌤𑌾𑌰𑌵𑌨𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌃 ।
𑌵𑌿𑌹𑌙𑍍𑌗𑌮𑍃𑌗𑌵𑍍𑌯𑌾𑌲𑌸𑌰𑍀𑌸𑍃𑌪𑌾𑌣𑌾𑌂
𑌵𑌨𑌂 𑌨𑌿𑌵𑌾𑌸𑌾𑌰𑍍𑌹𑌿𑌤𑌂 𑌤𑌪𑌸𑍍𑌵𑌿𑌨𑌾𑌂 ॥

இருள்மிகுதியால் இக்கானகம் மக்கள்வழக்கற்றது; பலவகையான விருக்ஷவரிசைகளால் திசை இன்னதென்றுகூடத் தெரியாமல் மறைபட்டிருக்கிறது; அன்றியும், இது பசுபக்ஷிகளால் நிறைந்தது; மகாமுனிவர்கள் தவம்செய்யத்தகுந்தது.

பெரியார்:—பார்ப்பனி! அஞ்சவேண்டாம். முனிவர்கள் இருக்கத்தக்க இடமென்பதைக் கேட்டு எனது அச்சம் நீங்கிவிட்டதுபோலும். இங்கே அருகில் பாண்டவர்களின் ஆச்சிரமம் இருக்கவேண்டும் என்று நினைக்கிறேன்.

𑌯𑌜𑍍𑌞𑍀𑌯𑌾𑌶𑍍𑌚 𑌶𑌰𑌣𑌾𑌗𑌤𑌵𑌤𑍍𑌸𑌲𑌾𑌶𑍍𑌚
𑌦𑍀𑌨𑍇𑌷𑍍𑌵𑌨𑍁𑌕𑌮𑍍𑌪𑌿𑌤𑌾𑌃 𑌕𑍃𑌤𑌸𑌾𑌹𑌸𑌾𑌶𑍍𑌚 ।
𑌸𑌦𑍍𑌵𑌂𑌶𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑌿𑌭𑌯𑌾𑌕𑍃𑌤𑌿𑌵𑍇𑌷𑌿𑌤𑌾𑌨𑌾𑌂
𑌦𑍁𑌃𑌖𑌂 𑌪𑌰𑌾𑌯𑌣𑍍𑌡𑌿𑌹𑌪𑌾𑌰𑌯𑌿𑌤𑍁𑌂 𑌸𑌹𑌾𑌯𑍈𑌃 ॥

பாண்டவர்களோவெனில், அமர்செய்ய விருப்பமுள்ளவர்கள்; சரணமடைந்தவர்களிடம் அன்புபாராட்டுபவர்கள்; எளியோர்களிடம் தயவுள்ளவர்கள்; ஊக்கமுள்ளவர்கள்; இவ்விதமான (அரக்கர்போன்ற) உருவம்கொண்டு தீங்குவிளைப்பவர்களுக்குத் தக்க தண்டனைசெய்வதில் வல்லவர்கள்.

புதல்வருள் முதலாமவன்:—அங்கே பாண்டவர்கள் இப்பொழுது இல்லையென எண்ணுகிறேன்.

பெரியார்:—குழந்தாய்! நீ எவ்விதம் அறிவாய்?

முதலாமவன்:—"சதகும்பம்" என்ற ஓர் வேள்வியைக்கண்டு களிப்பதற்காக, அவர்கள் "தௌமியக" முனிவரது ஆச்சிரமம் சென்றிருக்கிறார்கள் என்று அவ்வாச்சிரமத்திலிருந்துவந்த அந்தணரிடமிருந்து நான் கேள்விப்பட்டேன்.

பெரியார்:—ஐயோ! அப்படியானால், நாம் யாவரும் மடிந்தவர்களே!

முதலாமவன்:—அப்பா! அவர்கள் எல்லோரும் அங்கே போகவில்லை. தங்கள் ஆச்சிரமத்தைக் காப்பதற்காக அவர்களில் நடுவன் இங்கே நிறுத்தப்பெற்றிருக்கிறான்.

பெரியார்:—அவன் ஒருவன் இருந்தால், பாண்டவர்கள் எல்லோரும் இங்கே இருப்பதுபோலவே!

முதலாமவன்:—அவனும் இவ்வேளையில் தேகப்பயிற்சிக்காகத் தனது ஆச்சிரமத்துக்குச் சிறிதுதூரத்தில் போயிருக்கிறானென்று கேள்விப்படுகிறேன்.

பெரியார்:—ஐயோ! ஆசையற்றவர்களாக ஆனோமே!

முதலாமவன்:—அப்பா! தாங்கள் அவ்வரக்கனைச் சமாதானப்படுத்த முயற்சிக்கவேண்டாம்.

பெரியார்:—ஒழிவடைந்து முயற்சியை விட்டுவிடக்கூடாது.

முதலாமவன்:— (கடோத்கசனைநோக்கி) ஓ! புருஷரே! எங்களுக்கு விடுதலையுண்டோ?

கடோற்கசன்:—நல்ல அறிவைக்கொண்டு விடுவித்துக் கொள்ளக்கூடும்.

பெரியார்:—நல்லறிவு எது ?

கடோற்கசன்:—எனது தாயார் என்னைநோக்கிக் “குழந்தாய் என் உபவாசமுடிவில் பாரணைசெய்ய இவ்வனத்தில் ஒரு மனிதனைத் தேடிக்கொணர்வாயாக” என்று ஆணையிட்டார்கள். இப்பொழுது தாங்கள் அகப்பட்டீர்கள்.

> பத்ரா பவித்ருஸ்வாமின் ஸர்வதோ மோக்ஷ்யதி ।
> ஸபார்யஸ் ஸபரிஜநாய புத்ரமேகம் விஸ்ருஜ்ய ॥

தாங்கள் ஒருமகனை என்னுடன் அனுப்பினால், மனைவியுடனும் மற்ற இருபுதல்வர்களுடனும் தப்பிப்போகலாம். ஆகையால் எவனைவிடலாம் என்று யோசனைசெய்து ஒருபுதல்வனை விட்டுவிடுவீராக.

பெரியார்:—ஓ! கேடுகெட்ட அரக்கனே!

> ப்ராஹ்மண: ச்ருதவான் வ்ருத்த:
> புத்ரம் சீலகுணான்விதம் ।
> ராக்ஷஸஸ்ய து தத்வாஹம்
> கதம் நிர்வ்ருதிமாப்நுயாம் ॥

நான் அந்தணனல்லவா? வேதமோதியவனும் வயதுசென்றவனுமான நான், நல்லொழுக்கத்துடனும் நன்னடக்கையுடனும் கூடியபுதல்வனை நரமாமிசமுண்பவனை அரக்கன்கையில்கொடுத்துவிட்டு எவ்விதம் இன்பமடைவேன்?

கடோற்கசன்:—

> யத்யபி த்வம் த்விஜச்ரேஷ்ட புத்ரமேகம் ந தாஸ்யஸி ।
> ஸகுடும்ப: க்ஷணேநைவ விநாசம் ஸமவாப்ஸ்யஸி ॥

ஓ அந்தணப்பெரியாரே! நான் கேட்டுக்கொண்டும் நீர் ஒரு புதல்வனைக் கொடுக்கமறுத்தால், ஒருகணப்பொழுதில் குடும்பத்துடன் நாசமடைவீர்.

பெரியார்:—பார்ப்பனி! நான் இவ்விதம் முடிவுசெய்துவிட்டேன். செய்யவேண்டியவற்றைச் செய்ததும், முற்றித்தளர்ந்துபோனதும், ஸத்கர்மங்களால் பரிசுத்தமானதுமான இந்தச் சரீரத்தை, புதல்வர்களைக் காக்கும்விருப்பினால், அரக்கனாகிய அக்கினியில் ஹோமஞ்செய்துவிடுகிறேன்.

பார்ப்பனி:—பெரியவரே! அவ்விதம் செய்யக்கூடாது. கணவனைத் தொழுபவளே பதிவிரதையாவாள். மக்களைப்பெற்றுப்பயனளித்த இந்தச்சரீரத்தைக் கொடுத்துத் தங்களையும் குலத்தையும் காக்கவிரும்புகிறேன்.

கடோற்கசன்:—என் அன்னையாருக்குப் பெண்பாலிடம் விருப்பமில்லை. தாங்கள் அந்த எண்ணத்தை விட்டுவிடுங்கள்.

பெரியார்:—தம்முடன் நான் வருகிறேன்.

கடோற்கசன்:—வேண்டாம். நீர் கிழவர், விலகிவிடும்.

முதலாமவன்:—அப்பா! நான் சிறிது விண்ணப்பம் செய்துகொள்ளுகிறேன்.

பெரியார்:—புதல்வ! சொல்.

முதலாமவன்:—

𑌸𑍍𑌵𑌪𑍍𑌰𑌾𑌣𑍈𑌰𑍍𑌗𑍁𑌰𑍁𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍𑌨𑌿𑌷𑍍𑌕𑍍𑌰𑍀𑌯𑍈𑌵𑌵𑌿𑌪𑍍𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌮𑍍।
𑌰𑌕𑍍𑌷𑌣𑌾𑌯 𑌚 𑌕𑍁𑌲𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌯 𑌶𑍋𑌕𑌂 𑌹𑌰𑍍𑌤𑍁𑌮𑌿𑌹𑍋𑌤𑍍𑌸𑌹𑍇॥

என் பிராணன்களைக்கொடுத்து, தாய்தந்தையர்களின் பிராணனைக் காக்கவிரும்புகிறேன். இந்தக்குலத்தை இரட்சிப்பதற்காகத் தாங்கள் என்னை விட்டுவிடுவீர்களாக.

இரண்டாமவன்:—ஐயா! அதுசரியல்ல.

𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌃 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌃 𑌕𑍁𑌲𑍇 𑌲𑍋𑌕𑍇
𑌪𑌿𑌤𑍄𑌣𑌾𑌂 𑌚 𑌸𑌦𑌾 𑌪𑍍𑌰𑌿𑌯𑌃।
𑌤𑌤𑍋 𑌽𑌹𑌮𑍇𑌵 𑌯𑌾𑌸𑍍𑌯𑌾𑌮𑌿
𑌗𑍁𑌰𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑌨𑍁𑌷𑍍𑌠𑌿𑌤𑌾॥

உ

கடவுள் துணை

# சிராமலைக்கோவை

இது

மஹாமஹோபாத்யாய-திராவிடவித்யாபூஷண-
தாக்ஷிணாத்யகலாநிதி-டாக்டர்

## உ. வே. சாமிநாதையரவர்களால்

பரிசோதித்துத்
தாம் நூதனமாக எழுதிய குறிப்புரை முதலியவற்றுடன்
பதிப்பிக்கப்பெற்றது.

செந்தமிழ்ப் பிரசுரம்—௯௪

மதுரைத்தமிழ்ச்சங்க முத்திராசாலை
மதுரை
1937

—

விலை அணா 12

# பொருளடக்கம்

1. முகவுரை i—vii

[கோவையின் இயல்பு—சிராமலைக்கோவை—ஏட்டுப்பிரதி—பதிப்பு.]

2. சிராமலைச் சிறப்பு viii—xvi

[பெயர்—அகநானூற்றிற்கண்ட செய்தி—தலப்பெயர்கள்—மூர்த்திகளின் திருநாமங்கள்—பூசித்தோர்—தீர்த்தங்கள்—சிற்பமும் சிலாசாசனங்களும்—தேவாரம் முதலியன—புராணம்—உலா—பிரபந்தங்கள்—தனிப்பாடல்கள்.]

3. நூலாசிரியர் வரலாறு xvii—xxii

[காலம் முதலியன—முத்துக்குமாரசாமிக் கவிராஜர்—கல்வியறிவு—மாரியப்பமுதலியார்—வைத்தியலிங்கமௌனத்தம்பிரான்—நூலாசிரியர் குணவிசேடங்கள்.]

4. நூலாராய்ச்சி xxiii—xxxi

[தலச்செய்திகள்—புராணச்செய்திகள்—சைவநூற்கருத்துக்கள்—புலவர்களைப்பற்றியசெய்திகள்—முதலும் முடிவும்—குறட்சொற்பொருளாட்சி—பிறநூற்கருத்துக்கள்—பழமொழிகள்—தொனி—ஒருபொருளிருசொற்கள்—மயக்கம்—குறிப்பு—வெளிப்படை—அணிகள் முதலியன—அரும்பதங்கள்.]

5. சிராமலைக் கோவை—
மூலமும் குறிப்புரையும் 1—135

6. செய்யுண்முதற்குறிப்பகராதி 136—139

7. சிறப்புப்பாயிரம் 140

10. கள்ளு முருகுந் தருமல ரான்மிக்க சந்திறைஞ்சி
உள்ளும் புறமு மொருக்கவல் லார்கட் குலகறியக்
கொள்ளு மடிமை கொடுக்குந் துறக்கம் பிறப்பறுக்கும்
தெள்ளு மருவிச் சிராமலை மேய சிவக்கொழுந்தே. (47)

11. கொடும்பற் றுயங்கிக் குழிகண் ணிடுங்கிக் குரனடுங்கி
இடும்பைக் கொதுங்கி யிருமற் பகைகொல்ல வில்லிபட்ட
நெடும்பக் கனைய நிலையா வுடலை நிலையுமென்னார்
திடும்பற் கலுழிச் சிராமலை யாளியைச் சேர்ந்தவரே. (60)

12. கொடிக்கட் டியமணி மாளிகைத் தில்லையுட் கொற்றமன்னர்
முடிக்கட் டியமுகை சேர்கழன் மூவா யிரவர்முன்னின்
றடிக்கட் டியகழ லார்க்கநின் றம்பலத் தாடுமையர்
வடிக்கட் டியபொழில் வான்றோய் சிராமலை மாணிக்கமே. (67)

13. மருந்தே சிராமலை மாமணி யேமரு தூரமர்ந்தாய்
குருந்தேய் நறும்பொழிற் கற்குடி மேய கொழுஞ்சுடரே
முருந்தேய் முறுவ லுமைகண வாமுதல் வாவெனநின்
றிருந்தே நிறையழிந் தேன்வினை யேன்பட்ட வேழைமையே. (75)

14. வந்திறைஞ் சித்தளர்ந் தென்சொல்லு மோசிந்தை மாதவர்மேற்
சந்திறைஞ் சிப்படர் சாரற் சிராமலைத் தாழ்பொழில்வாய்க்
கொந்திறைஞ் சிக்கமழ் கோதை குலாவிக் குழலவிழப்
பந்திறைஞ் சிப்பிடிப் பாளிடைக் கேசென்று பற்றுண்டதே. (89)

15. நோயிலங் காத லுடையநெஞ் சேநுரை வெண்கட லுட்
போயிலங் காபுரஞ் செற்றபொற் றேரவன் போந்திருந்து
வாயிலங் கார்தரு மந்திரத் தால்வணங் கிப்பணிந்த
சேயிலங் கார்கழற் றீர்த்தன் சிராமலை சென்றடைந்தே. (91)

16. தொடரிடை யாத்த ஞமலியைப் போலிருந் தேனிச்சுற்றத்
திடரிடை யாப்பவிழ்த் தென்னைப் பணிகொள்பொன் னைப்புரையும்
சுடரிடை யாத்தபைங் கொன்றையு மத்தமுஞ் சூழ்சடையின்
டடரிடை யாத்த பரமா சிராமலைப் பால்வண்ணனே. (94)

17. பொய்யினைப் பேசிப் பொருளினைத் தேடிப் புழுப்பொதிந்த
மெய்யினைக் காத்து வெறுத்தொழிந் தேன்வியன் பொன்மலைமேல்
ஐயனைத் தேவர்தங் கோனையெம் மானையம் மான்மறிசேர்
கையனைக் காலனைக் காய்ந்த பிரானைக் கழல்பணிந்தே. (97)

18. ஒக்கிய கையொ டொருக்கிய வுள்ளத்தி யோகியர்தம்
வாக்குயர் மந்திரம் வானரங் கற்றுமந் திக்குரைக்கும்
தேக்குயர் சாரற் சிராமலைக் கூத்தன்செம் பொற்கழன்மேல்
ஆக்கிய சிந்தை யடியர்க்கென் னோவின் றரியனவே. (101)

19. அரியன சால வெளியகண் டீரரு வித்திரள்கள்
பரியன நேர்மணி சிந்துஞ் சிராமலைப் பால்வண்ணனைக்
கரியன செய்யன நுண்புகர்ப் பைங்கட் கடாக்களிற்றின்
உரியனை நாழிகை யேத்தவல் லார்க்கிவ் வுலகத்துளே. (102)

20. மற்பந்த மார்வன் மணியன் மகன்மதிள் வேம்பையர்கோன்
நற்பந்த மார்தமிழ் நாரா யணனஞ் சிராமலைமேற்
கற்பந்த னீழலில் வைத்த கலித்துறை நூறுங்கற்பார்
பொற்பந்த னீழ லரன்றிருப் பாதம் பொருந்துவரே. (103)

## மண்டப முதலியன

தளவாய்முதலியாரவர்களால் வஸந்தோத்ஸவத்திற்காக அமைக்கப்பட்ட பதினாறுகால்மண்டபமொன்று இங்கு உண்டு; அதற்குத் தளவாய்மண்டபமென்று பெயர். திருமதிலில் தளவாய் முதலியாருடைய பிம்பமும், இத்தலத்தில் அவர் பெயரால் தளவாய்க்குளமென்ற தீர்த்தமும் உள்ளன. அவ்வக்காலங்களில் பலரால் இயற்றப்பட்ட வேறு பல மண்டபங்கள் இங்கே இருக்கின்றன.

## தேவாரமும் பிற பாடல்களும்

இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் குறிஞ்சிப்பண்ணில் அருளிச்செய்த தேவாரப்பதிகம் ஒன்றும், திருநாவுக்கரசர் அருளிச்செய்த திருக்குறுந்தொகைப்பதிக மொன்றும் இருக்கின்றன. ஐயடிகள் காடவர்கோன் நாயனாரால் அருளிச் செய்யப்பெற்ற க்ஷேத்திரத்திருவெண்பாவில் இத்தலத்தைப்பற்றியதாக உள்ள செய்யுள் ஒன்று வருமாறு:—

"கழிந்தது நென்னற்றுக் கட்டுவிட்டு நாறி
ஒழிந்த துடலிரா வண்ணம்—அழிந்த
சிராமலையா கொண்டுபோ வென்னுமுன் னெஞ்சே
சிராமலையான் பாதமே சேர்."

அருணகிரிநாதராற் பாடப்பெற்ற திருப்புகழ்ப்பாக்கள் சில இத்தலத்திற்கு உண்டு.

தமிழ்நாவலர்சரிதையில் 'இறையனார் பொய்யாமொழிப்புலவர் முன்பு சிராமலையைப் பாடிய வெண்பா' என்னும் தலைப்பின்கீழ்,

"கோட்டாற் கொழும்பிரசங் குத்தி யதனடுவே
பாட்டாற் பணைக்கை புகமடுத்துக்—காட்டானை
தேனீ ரருந்துஞ் சிராமலையே செஞ்சடைமேல்
வானீர் கரந்தான் மலை"

என்றதொரு வெண்பாவும், 'பொய்யாமொழியார் பாடல்' என்னும் தலைப்பில்,

"அங்கம் புலியத ளாடையைச் சாத்தி யரவமுடன்
பங்கம் புலிவைத்த பண்பர்க் கிடம்பணை வாளெயிற்று
வெங்கட் புலியைவிட் டியானையைத் தேடி விதம்விதமாய்ச்
சிங்க மிருந்து தனித்தனி நோக்குஞ் சிராமலையே"

என்ற கலித்துறையும் இச் சிராப்பள்ளிவிஷயமாகக் காணப்படுகின்றன.

இத்தலத்தில் எழுந்தருளியிருந்த சிவஞானச்செல்வராகிய தாயுமானசுவாமிகள் இயற்றிய சிரகிரித் தக்ஷிணாமூர்த்தி பதிகமும், சிராமலையப்பரைப் பாடிய வேறு சில செய்யுட்களும் உண்டு.

## புராணம்

இத்தகைய சிறப்பமைந்த தலத்தின்சம்பந்தமாகச் சைவ எல்லப்பநாவலர் இயற்றிய புராணம் ஒன்று உண்டு; சேவ்வந்திப் புராணமென்பது அதன் பெயர்.

## உலா

பழைய ஏட்டுச்சுவடியொன்றில் இருந்த ஒரேட்டில் இத்தலத்திற்குரிய உலாவின் இறுதிக்கண்ணிகள் சில எழுதப்பட்டிருந்தன. பலவிடங்களில் தேடியும் அந்நூல் முழுவதும் கிடைக்கவில்லை. அக்கண்ணிகள் வருமாறு:—

"..........................மட்டு வார்குழலாம்
நல்லாளோ டின்ப நகைமேவிச்—சொல்லார்ந்த
மூவர் முதலோர் முழுத்தமிழு மன்புடையார்
யாவர் தமிழு மணிந்தருள்வோன்—ஆவியாய்
அத்தனு மாவதன்றி யன்னையுந்தா னயபிரான்
சித்த மகிழ்தேன் சிரகிரியான்—சுத்த
நிலாவும் பகிரதியு நீண்ட சடைமேல்
உலாவவே போந்தா னுலா."

## வேறு பிரபந்தங்கள்

பழைய *பதிற்றுப்பத்தந்தாதிகள் இரண்டும், திரிசிரபுரம் மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்களாற் பாடப் பட்ட †யமக அந்தாதி யொன்றும், அவர்களுடைய மாணாக்க ராகிய சோடசாவதானம் சுப்பராயசெட்டியார் இயற்றிய *சிலேடை வெண்பா வொன்றும் இத் தலத்திற்கு உள்ளன.

## தனிப்பாடல்கள்

இத்தலசம்பந்தமான தனிப்பாடல்களிற் சில வருமாறு:—

1. "சிரபுரமா வீசர் செட்டிமகட் காவேடம்
தரித்து மருத்துவஞ்செய் தாயானா ரம்மானை
தரித்து மருத்துவஞ்செய் தாயானா ராமாயின்
மருத்தெண்ணெய்ச் சிக்கன்றி மணமிவர்க்கே தம்மானை
மட்டுவார் குழலிருக்க மணமரிதோ வம்மானை"

(மூவரம்மானை.)

(வெண்பா)

2 "முல்லையுங் குழலு முளைப்பதற்கு முன்னே
கல்லையும் வளையுங் கழன்றாள்—மலையிற்
சிராப்பளியா னேறிவருஞ் சேவின்மணி யோசைக்
கிராப்பளியுங் கொள்ளா ளிவள்."

பல வடமொழிச் சுலோகங்களும் வடமொழி தென்மொழிக் கீர்த்தனங்களும் இத்தலமூர்த்திவிஷயமாக இருக்கின்றன.

---

* இவை அச்சிடப்படவில்லை.

† இதனை ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டிற் காணலாம்.

# நூலாசிரியர் வரலாறு

## காலம் முதலியன

சிராமலைக்கோவையின் ஆசிரியர் பெயர் இன்னதென்று தெரியவில்லையாயினும் நூலினுள் வந்துள்ள சான்றுகளைக்கொண்டு இவருடைய காலம் இற்றைக்குச் சற்றேறக்குறைய 150 வருஷங்களுக்கு முன்னதென்றும், இவர் சிவபக்திச்செல்வரென்றும், செந்தமிழ்ப்புலவரென்றும், நன்றியறிவு மிக்கவரென்றும் அறிந்துகொள்ளலாம். சிராமலைக்கோவை எழுதியிருந்த சுவடியொன்றன் ஓரேட்டில் இவ்வாசிரியர் தம்முடைய ஆசிரியராகிய திருநெல்வேலி முத்துக்குமாரசாமிக்கவிராஜருக்கு எழுதிய கடிதமொன்றன் பிரதி உள்ளது. அது வருமாறு:—

(வெண்பா)

"அருளே திருவுருவா யம்புவியின் மேலாம்
பொருளே தமியேன் பொருட்டா—இருடீர
வந்தருளு முத்துக்கு மாரசா மிக்குருவைப்
பந்தமற நெஞ்சே பணி.

"சுவாமியவர்கள் பாததூளியில் ஒன்றை அடியேன் சிரசின்மேற்கொண்டதன் வல்லபத்தாற் பாடிய கோவையைச் சுவாமியவர்கள் ஸந்நிதானத்திற் கனுப்பினேன். திருக்கண் சாத்தியருளவேண்டுவது. வேணும் விண்ணப்பம்.

"சுவாமியவர்கள் கிருபாகடாட்சத்தினாலே இந்தப்பிரதேசங்களெல்லாம் பிரபலமாக நன்னூலுரையே படித்து வருகிறார்கள். அகப்பொருளுரை வேண்டியிருக்கிறது.

"தாயுமானசுவாமிக்கும் 'சீர்கொண்ட' என்பதற்கும் பொருத்தம்:-

"சீர்கொண்டவென்பது மங்கலமொழியாதலானும், வகையுளி சேர்தல்முதலாயினகுற்றமின்றிநிற்றலானும், 'தப்பாத மூன்றைந்தே ழொன்பான் றவறில' என்பவாகலான் இஃதஞ்செழுத்துச்சீராகலானும், 'குறிலைந்துந் தந்நெடில்கொண் டிஉ ஐ ஔசேர்ந், தறிபாலன்' என்பதனால் குமாரப்பொருத்தமாதலானும், 'எண்ணுங் குறிலா னியைந்த நெடிலெல்லாம், பெண்ணாகு

மொற்றுய்தம் பேடாகும் — பெண்ணினே, டாண்புகழ்ச்சிக் கவ்வவ் வெழுத்தா மயக்கினுமாம்' என்பவாதலிற் பாற்பொருத்தமும், 'மதித்த கசதநப மவ்வொடு வவ்வு, முதித்தமைந்த நாற்குற் றுயிரும்—துதித்தமிழ்தென்று' என்பவாகலான் உண்டியும், 'ஒழியா வுயிரனைத்து மொற்றுமுத லாறும், அழியா மறையோர்க் காம்' என்பவாகலின் வருணமும், 'போற்றுமிரண் டேழ்மூன்று பொய்தீர் தகரத்துச், சாற்றுவர் சோதி முறஞ்சதயம்' என்பவாகலினுல் தகர ஆகாரம் சோதியாதலானும் 'பிரிந்த சகரத்து நான்கைந்து பின்மூன், றரிந்த கடைமுதன்மூன் றாகும்' என்பவாகலின் சகர ஈகாரம் இரேவதியாகலானும் சுவாதிக்கும் இரேவதிக்கும் பொருத்தமுடைமையானும், 'வேண்டுங் குறில்வன்மை யீறெழித்தால் விண்ணோர்க்காம்' என்பவாகலிற் கதியும், 'நேர் மூன் றாகிய சீரிய மானன்' என்பவாகலானும் 'நிலனு நீரு மதியுமிய மானனு, நலமிகு முதல்வரின்' என்பவாகலானும் கணமும் ஆகிய பத்துப்பொருத்தமும் பொருந்தியிருத்தல் கண்டுகொள்க."

இதன்பின் கையெழுத்துக் காணப்படவில்லை. இதனுல் இவ்வாசிரியர் குருபக்தியுடையவரென்பதும் நன்னூல் முதலியவற்றைப் பல மாணுக்கர்களுக்குப் பாடஞ்சொல்லிவந்தவரென்பதும் புலனுகின்றன.

### முத்துக்குமாரசாமிக் கவிராஜர்

இந்நூலாசிரியரின் ஆசிரியராகிய முத்துக்குமாரசாமிக்கவிராஜரென்பவர் திருநெல்வேலி மேலைரதவீதியிலிருந்த அம்பலவாணகவிராஜருடைய புதல்வர். அவர் திருப்புடைமருதூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி, அறுபத்துமூன்று நாயன்மார்களும் மாணிக்கவாசகரும் சிவபதமடைந்த திருநக்ஷத்திர அந்தாதிக்கலித்துறை முதலிய நூல்களை இயற்றியிருக்கின்றனர். அவருக்கு அம்பலவாணகவிராஜர், கவிராஜநெல்லையப்பபிள்ளை யென இரண்டு குமாரர் இருந்தனர்.

### கல்வியறிவு

முத்துக்குமாரசாமிக்கவிராஜர்பால் இந்நூலாசிரியர், பலநூல்களைப் பயின்றார்; நன்னூல்முதலிய ஐந்திலக்கணங்களிலும்

பொருத்தவிலக்கணத்திலும் இலக்கிய நூல்களிலும் நல்ல பயிற்சியுடையவர்; திருக்குறளிற் பேரன்புடையவர்; இந்நூலிற் பல விடங்களில் அந்நூற் கருத்துக்களையும் பாக்களையும் எடுத்தாண்டிருப்பதனால் இதனை அறியலாகும்.

## மாரியப்பமுதலியார்

இவரை ஆதரித்தசெல்வர் மாரியப்பமுதலியாரென்பவர். அவர் தொண்டைமண்டலத்தில் சென்னைக்கருகில் பொன்னேரிதாலூகாவைச் சேர்ந்ததாகவுள்ள *விளாங்காட்டுப்பாக்கமென்னும் ஊரினர். அவ்வூரில் ஒரு பழைய சிவாலயம் இருக்கிறது. அங்கே எழுந்தருளியுள்ள ஸ்வாமியின் திருநாமம் இலவபுரீசரென்பது. இராமபிரான் புதல்வர்களாகிய குசலவர்களில் லவன்பூசித்ததனால் இத்திருநாமமுண்டாயிற்றென்று அங்குள்ளார் கூறுகின்றனர். அம்பிகைதிருநாமம் திரிபுரசுந்தரி யென்பது. மாரியப்பமுதலியாருடைய சந்ததியினர் யாரும் இப்பொழுது அவ்வூரில் இல்லை.

அம்முதலியார் கொண்டைகட்டிவேளாளரென்ற சைவர்கள் வகையில் கன்னவராயகோத்திரத்திற் பிறந்தவர். அவருடைய தந்தையார்பெயர் அருணாசலமுதலியாரென்பது. கன்னவராய கோத்திரத்திலுதித்தவராதலின் ராய அருணாசலனென்றும், அருணாசலராயனென்றும் அவர் வழங்கப்பெறுவர். மாரியப்பமுதலியாரையும் அவர் தந்தையாரையும் இந்நூலாசிரியர் பாராட்டியுள்ள பகுதிகள் வருமாறு:—

1. "பொறையாரு மாரியப் பேந்திரன் வாய்மையைப் போற்றுதல்போல்" (152)

2. "குளங்காட்டு கண்ணர் சிராமலை நாதர் குவளையந்தார்
விளங்காட்டு மாநகர் வாழ்மாரி யப்பனை மெய்யருளால்
வளங்காட்டு வண்செல்வ மீந்தென்றுங் காப்பது மான" (153)

3. "பந்தப் பவந்தொலைத் தாள்வோன் சிராமலை பாடினர்க்குத்
தந்தச் சிவிகை தருமாரி யப்பன் றடக்கைநிதி
முந்தச் சொரிவ தென" (283)

---

* பல வயல்களுக் கிடையிலுள்ள இவ்வூருக்குச் சிலவாரங்களுக்குமுன் சென்று விசாரித்ததில் மாரியப்பமுதலியாரைப்பற்றியேனும் அவர் குடும்பத்தைப்பற்றியேனும் சொல்லுவார் ஒருவரும் இலர்.

4. "பன்னு கலைபெறி னெம்மான் சிராமலைப் பான்மொழியாய்
மன்னர் புகழும் விளங்காட்டுப் பாக்கநன் மாநகர்வாழ்
கன்னவ ராய மரபரு ணாசல கன்னனருள்
தென்னவன் மாரியப் பேந்த்ரன் மகிழ்ந்தருள் செய்குவனே" (433)

5. "நீடு மிராய வருணா சலன்மறு நீதியினால்
நாடு மதிதொறும் பெய்வதுபோல்" (285)

இவை மாரியப்பமுதலியாரது சிவபக்தியையும், புலவர்களை ஆதரிக்கும் வண்மையையும் அறிவிக்கின்றன. தம்மைப் பாடுவாருக்குப் பரிசிலையளித்துவக்கும் செல்வர்கள் பலரினும் சிவபிரானைப் பாடுவாருக்கு வழங்குவோர் மிகச்சிறந்தோராவர்; அத்தகைய சிறப்பையுடையவர் மாரியப்பமுதலியாரென்பதை, 'சிராமலை பாடினர்க்குத், தந்தச் சிவிகை தரு மாரியப்பன்' என்னும் பகுதி தெளிவிக்கும். அவர்மீது கோவை பாடாது சிராமலைக்கோவை பாட இவ்வாசிரியர் முற்பட்டதும் முதலியாரது இயல்புகண்டேயென்று தோற்றுகின்றது.

முதலியார் அக்காலத்தில் 'நாயிப் சிரஸ்தேதார்' (Naib-Sheristadar) என்னும் உத்தியோகத்தில் இருந்தனர். இரண்டு வெள்ளி ரிஷபவாகனங்கள் செய்வித்துத் தாயுமானவர் ஆலயத்திற்கு வழங்கினர். சித்திரை உத்ஸவத்தில் ஐந்தாந்திருவிழாவில் வெள்ளிரிஷபவாகனக்காட்சியை நடத்திவந்தனர். அவருக்குத் திரிசிரபுரத்தில் சின்னக்கடைத்தெருவிற் பல வீடுகள் இருந்தன. அத்தெருவிற்கருகில் அவர்பெயரால் ஒருசந்து இப்பொழுது இருக்கிறது.

அவருக்குச் சுந்தரமுதலியாரென்ற ஒரு புதல்வர் இருந்தனராம். அவர் அக்காலத்தில் பத்திரவிற்பனையாளர் (Stamp-Vendor) ஆக இருந்தனரென்பர்.

## வைத்தியலிங்க மௌனத்தம்பிரான்

இந்நூலாசிரியர்காலத்தில் திரிசிராமலைக்கோயிலின் நிர்வாகத்தை வகித்துவந்தவர், அங்குள்ள ஸ்ரீ மௌனசுவாமிகள்மடத்

தில் 7-ஆம் பட்டத்தில் தலைவராக இருந்த வைத்தியலிங்கமௌனத் தம்பிரானென்பவர். அவரை இந்நூலாசிரியர்,

> "மோன வயித்திய லிங்கமெய்ஞ் ஞான முனிசெயுமன்
> பான பணிக்கரு ளெம்மான்" (291)

என்று குறிப்பிக்கின்றார். அவர் அம்மடாலயத்தின் அதிபதியாகச் சாலிவாகனசகாப்தம் 1676 (கி. பி. 1753) வெகுதானியஞூ ஐப்பசிமாதமுதல், சகம் 1722 (கி. பி. 1799) துர்துபிஞூ புரட்டாசி மாதம் வரையிலுள்ள 46 வருஷகாலம் இருந்தனர். அவருடைய முயற்சியால் சிராமலைக்கோயிலில் பல திருப்பணிகள் செய்யப்பட்டன. மௌனசுவாமிகள்மடத்தைப்பற்றிய குறிப்புக்க ளடங்கிய பழைய*புத்தகமொன்றில், அவர் தலைமைவகித்தகாலத்தில் திரிசிராப்பள்ளியாலயத்திற்குரிய வருவாய்கள் விரிவாகக் காணப்படுகின்றன. அவற்றைத் தொகுத்துக் காட்டுகையில் அப்புத்தகம்,

> 'நவாபுசாயபு அவர்கள் ராஜரீகத்தில் எ-வது பட்டம் வைத்திலிங்கத்தம்பிரானவர்கள் நாளையில் உண்டாகிய ஊதிபம் காட்டாம்பட்டிக்கிராமம், க-கோமங்கலம் கிராமம், க-இடையப்பட்டி கிராமம், க-வெண்ணமங்கலம் கிராமம், க-பொத்தம்பட்டி கிராமம், க-கொழுப்பட்டியில் புஞ்சையில் 27800 குழிநிலமும், தொண்டைமானர் பாதிகாவற்பொறுப்புப்பணமும், தில்லன்பட்டிக்கிராமமும், கறிச்சான்பட்டிக் கிராமமும், கத்தலூர்பட்டவர்த்தியும். இந்த ஊதிபங்களெல்லாம் வைத்திலிங்கத்தம்பிரானவர்கள்நாளையில் உண்டாகிய ஊதிபங்கள்'

என்று தெரிவிக்கின்றது.

அவர் பலசெல்வர்களையும் ஜமீன்தார்களையும்கொண்டு, அன்னசத்திரம் முதலிய தருமங்களைச் செய்வித்தனர்; சுவாமிக்குப் பெரிய வெள்ளிரிஷபவாகனம், வெள்ளிக்குடை, கமலவாகனம், கற்பக விருக்ஷவாகனம், கிளிவாகனம், அன்னவாகனம், மயில்வாகனமென்பன செய்தளித்தார். சாலிவாகனசகாப்தம் 1708 (கி. பி.

* இது 'செந்தமிழ்ச்செல்வி' என்ற பத்திரிகையின் பன்னிரண்டாப் தொகுதியில், 'திருச்சிமலைக்கோவில்' என்னும் தலைப்பின்கீழ் வெளியிடப்பட்டுள்ளது; இச்செய்திகளை அறிவதற்கு இஃது ஒருதவியாக இருந்தது.

1785) பராபவஷூ வைகாசிமீ சுவாமிக்கு அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகமும், மண்டலாபிஷேகமும் தம்முடைய மடாலய வரும்படியிலிருந்து செய்வித்தார்.

## நூலாசிரியர் குணவிசேடங்கள்

மேலே கூறிய வைத்தியலிங்கமுனிவரிடத்தில் இந்நூலாசிரியர் பக்தியுடையவர்; இறைவன் திருப்பணியில் ஈடுபட்டவர்களைப் பாராட்டும் இயல்பினர்.

இவர் சிராமலையப்பரைப் பாடுவதில் இன்பமும் பெருமையும் அடைபவர்;

> "நதியா டரவணி யெம்மான் சிராமலை நாதனன்பர்
> துதியா வெனது சிறுமொழிப் பாடற் றொடையுங்கொண்டு
> கதியா னுறவருள் செய்தோன்" (77)

என்பதிலும்,

> "ஆட வெடுத்தபொற் பாதத்தை நாடி யனுதினமும்
> பாட நமக்கருள் பெம்மான்" (111)

என்பதிலும் சிவபெருமானைப் பாடும்பொழுது இவருக்கு உண்டாகும் உள்ளநிறைவு வெளிப்படுகின்றது.

இவரது வாழ்க்கைவரலாற்றைத் தெளிவாக நாம் அறிய முடியாவிடினும், இவரது புகழை நமக்குத் தெரிவிக்கும் இக்கோவை இவருடைய புலமையையும் இயல்பையும் எடுத்துக்காட்டும் கண்ணாடியாக விளங்குகின்றது. இதன்பின் உள்ள 'நூலாராய்ச்சி' என்ற பகுதியினால் இவரது புலமையின்விரிவை ஒருவாறு அறியலாகும்.

# நூலாராய்ச்சி

## தலச்செய்திகள்

இந்நூலின்கண் பாட்டுடைத்தலைவராகிய தாயுமானவருடைய சிறப்புக்கள் பலபடியாகப் பாராட்டப்படுகின்றன. காப்புச் செய்யுளில் மட்டுவார்குழலம்மை, தாயுமானவர், செவ்வந்தி விநாயக ரென்னும் மூவர் திருநாமங்களும் வந்துள்ளன. தலத்தின் பெயர்களாகிய சிராமலை, தென்கயிலை யென்பன விரவிப் பயின்றுள்ளன. சிவபெருமான் செவ்வந்திமலரை அணிந்துகொண்டதை முதற்பாட்டிலே இந்நூலாசிரியர்,

"செவ்வந்தியொ டேய்ந்த கொன்றைத் தார்கொண்ட வேணியர்"

என்று குறிக்கின்றார். தலத்திற்குரிய சிறப்புமலராதல்குறித்து அம்மலரை முற்கூறி, உயர்பின்வழித்தாகிய ஒடுவை அதற்குக் கொடுத்து, அடையாளமாலையாகிய கொன்றையைப் பிற்கூறுதல் கவனிக்கத்தக்கது. அம்மலரைச் சாரமாமுனிவர் சிவபெருமானுக்கு அணிந்தனரென்பதை 409-ஆம் செய்யுளில்,

"சார தபோதனர் சாத்துசெவ் வந்தியின் ரூரணியும், சீரர்"

என்று கூறுகின்றார். சிராப்பள்ளிநாதர் ஒரு வணிகப்பெண்ணுக்கு அன்னையாகிவந்த செய்தியை,

"மதிமுக மாகுமோர் பேதைக் கன்னையாய் வருங்கருணை நிதி" (5)

"அன்னைவடிவான சிராமலையார்" (16)

"தாயாகி வந்தொரு பேதையைக் காத்த தனிமுதல்வோன்" (74)

"தாயே யெனமகிழ்ந் தாண்டோன்" (100)

"தாய்க்கு நிகரென வந்தோன்" (355)

"தாயான வீசர்" (414)

என எடுத்தமைக்கின்றார்.

"அன்னையு மத்தனு மாகுஞ் சிராமலையார்" (116)

"அன்னையு மத்தனு மாவோன்" (339)

"தாயனையான்" (361)

என்பவற்றிலும் அச்செய்தி குறிப்பாக வெளிப்படுகின்றது. தலைவி மகப்பொறைகூர்ந்தவண்ணத்தைத் தோழி தலைவனுக்குரைப்பதாக உள்ள செய்யுள்,

"சேயா ரிதழ்வெளுத் தாகம் பசந்து சிகரிநிக
ராயார் முலைக்கண் கறுத்துச் சிராமலை யாயிழைக்குத்
தாயா மமல னருளாற் கருப்பந் தரிக்கவிசைத்
தூயா யெழில்பெறத் தோன்று விடைவந்து தோன்றியதே" (417)

என்பது. இதில், ஒரு மகள் கருவுயிர்த்தற்குத் துணைசெய்தருளிய தாயுமானவர் ஒருமகள் கருத்தரிப்பதற்கும் அருளினரெனக் கூறியது மிக்க பொருத்தமுடையது.

"கடலைப் பருகிய மாமுனி போற்றக் கருணைசெய்தோன்" (442)

என அகத்தியர் வழிபட்டதும்,

"நன்னாக கன்னியர் போற்றுஞ் சிராமலை" (408)

என நாககன்னியர் வழிபட்டதும் சொல்லப்படுகின்றன.

இத்தலத்து அம்பிகையின் திருநாமம், 23, 270, 456, 458-ஆம் செய்யுட்களில் வந்துள்ளது.

இத்தலத்திற்குரிய தீர்த்தங்களுள், காவிரி பல இடங்களிற் (110, 117, 151, 317) கூறப்படுகின்றது. நன்றுடையான், தீயதிலானென்பன,

"நன்றுடை யானையுந் தீயதி லானையு நற்றிருத்தம்
என்றுடை யானைச் சிராமலை யானை" (172)

என்பதில் அமைந்துள்ளன.

"விஞ்சை பலவரும் பாவலர் பணியெம்மான்" (121)

"காவலர் போற்றும் பிரான்" (230)

என்று இறைவனை இந்நூலாசிரியர் பாராட்டுதல் பலபுலவர்கள் சிராமலையீசரைப் பாடிய செய்யுட்களை நினைந்தேயென்று தோற்றுகின்றது.

"பூவா முளிசண்பை யாண்டகை யார்முனம் போற்றிசெய்த
தேவார மோதுஞ் சிவன்வாழ் சிராமலை" (85)

என்பது இத்தலத்தில் ஞானசம்பந்தர் வந்து வழிபட்டுத் தேவாரப் பதிகம் அருளிச்செய்ததைப் புலப்படுத்துகின்றது.

## புராணச் செய்திகள்

திருஞானசம்பந்தர் என்பைப் பெண்ணுக்கியதும் (434) சுந்தரமூர்த்திநாயனர் இறைவனைப் பரவைநாச்சியாரிடத்துத் தூதுவிடுத்ததும் (203) சண்டீசர் தம் தந்தையின் தாளைத் தடிந்ததும் (114) கண்ணப்பர் வேடர்குலத் துதித்ததும் (133) ஆகிய பெரியபுராணச்செய்திகளும், கரிக்குருவிக்கு முத்தியளித்தது (174) மதுரைத் தமிழ்ச்சங்கத்திலிருந்து இறைவன் தமிழாராய்ந்தது (427) ஆகிய திருவிளையாடற்புராணச்செய்திகளும், காசிப முனிவர் மாயையை விரும்பியதாகிய (48) கந்தபுராணச்செய்தியும் இதிற் காணப்படும்.

சிவபெருமான் திருமன்றுள் நடித்தருளியதாகிய (219, 401) தில்லைச்செய்தியும், தியாகப்பெருமானென்னும் திருநாமமுடையவ ரென்ற (377) திருவாரூர்ச்செய்தியும் இக்கோவையில் வந்துள்ளன.

## சைவநூற் கருத்துக்கள்

சைவசாஸ்திரக்கருத்துக்கள் பல ஏற்புடைய இடங்களில் அழகாகப் பொருத்தப்பெற்றிருக்கின்றன. அப்பகுதிகள் சுருங்கச் சொல்லியிருப்பினும் விரிந்தபொருளை யுடையன.

## புலவர்களைப்பற்றிய செய்திகள்

புலவர்களைப்பற்றி இக்கோவையாசிரியர் கூறியுள்ள கருத்துக்கள் மிகவும் அரியன. நற்பாவலர், சொல்லும் செயலும் இனியார் பாற் பழகுவரென்பர்;

"கொடுத்தலு மின்சொலு முள்ளவர் பாலன்பு கொண்டுசென்றங்
கடுத்தினி தேகுநற் பாவலர்" (28)

கற்றதனாலாய பயன் இறைவனைப் பணிதலேயாதலின், புலமை பெற்றதனாலாய பயன் சிவபெருமானைப் பாடுதலேயன்றிப் பிறரைப் பாராட்டுதலன்றென்பது இவர் கொள்கை;

> "......... கவிஞர் தமிழ்த்தொடையைக்
> கந்தார் களிற்றுரி யார்தென் கயிலைக் கருத்தர்க்கன்றிப்
> .........பிறர்க்காக்கும் பரிசெனவே" (395)

தமிழில் அறிவுவாய்ந்தவர்கள் பிறமொழிகளைக் கற்றதனாற் குறையொன்று மில்லையென்பர்;

> "................. தமிழாய்புலவோர்
> தேர்தரு மேலை மொழியுங்கற் றற்று." (427)

## முதலும் முடிவும்

இக்கோவையின் முதற்செய்யுளில் ஐந்து திணைக்கும் உரிய மலர்கள் கூறப்படுகின்றன. இம்முறை திருச்சிற்றம்பலக்கோவையாரைப் பின்பற்றியது; அந்நூலின் முதற்செய்யுளுரையிற் பேராசிரியர்,

> 'பலநிலங்கட்குமுரிய பூக்களைக் கூறியவதனால், நிலமயக்கங்கூறிய வாறாயிற்று. ஆகவே, பலநிலங்களினுஞ் சென்று துய்க்கும் இன்ப மெல்லாம் தில்லையின் வாழ்வார் ஆண்டிருந்தே துய்ப்பரென்பது போதரும்'

என்று எழுதினர். இக்கருத்தை ஈண்டுச் சிராமலைவாழ்வார்க்கும் கொள்க.

கோவைநூல்களிற் பெரும்பாலனவற்றின் இறுதியில் 'தலைமகளைக் கலந்திருந்த தலைமகன் முகிலொடு மகிழ்ந்து கூறல்' என ஒருதுறை காணப்படும். அஃது இதன்கண் இல்லை. 'தலைவன் வந்துழி மகிழ்ச்சி' என்னும் பாங்கிகூற்றோடு முடிகின்றது.

## குறட்சொற்பொருளாட்சி

"**தாம்**கற்ற நூலளவே யாகுமாம் நுண்ணறிவு" என்பதற்கேற்ப நுண்ணறிவுடைய இந்நூலாசிரியர் பலபழையநூல்களைக் கற்றுத் தேர்ந்தவர்; திருக்குறளில் ஈடுபட்டு அதன் சொல்லையும் பொருளையும் பலவிடங்களில் எடுத்தாண்டுள்ளார்:

* "நுண்ணமா ணுழைபுல மில்லாரிற் சால நுவன்றனனே" (58)

என்பது குறளிலுள்ள சொற்றொடரை எடுத்தமைத்தது.

"...............பைந் தொடி யெம்
மெய்வாய் விழிசெவி மூக்கு மூவந்துடன் மேவியுண்ண
உய்வாம் படியனைந் தூட்டினள்" (40)

"கண்டாலு மோவின்பங் கேட்டாலு மோவின்பங் காதலிதழ்
உண்டாலு மோவின் புயிர்த்தாலு மோவின்ப மூங்கணைத்துக்
கொண்டாலு மோவின்பம்" (147)

"தன்னைப் புரந்து தலைவனைப் பேணித் தகைபெறுசொல்
மன்னப் புரந்து விருந்தோம்பி " (388)

"தூய கடவுள் கொழுநனென் றேத்தித் தொழுதெழுந்து" (389)

"எண்ணு மெழுத்தும் விழியாமெனின்" (436)

என்பவை குறளிலிருந்து அள்ளிக்கொண்ட கருத்துக்கள்.

"பேறு களிற்பெரி தாமைந்தர்ப் பேறெனப் பேறுடையோர்
கூறு மொழிப்பொருண் மெய்யே" (429)

என்றது குறளை மேற்கோள்காட்டியது.

## பிறநூற் கருத்துக்கள்

"பெரியவர் கேண்மை வளர்பிறை யாமெனும் பெற்றியொத்தே" (430)

என்பது நாலடியிலிருந்து கொண்டது.

"பொன்னே யெழிற்சடை யெம்மான் சிராமலை போற்றுமித்தாய்
இன்னே யிருவ ருமைநிகர் வாரிவ ணெய்தினரோ
முன்னே யெனவுரை யாடினள் கண்டனன் மொய்ம்பனையான்
மின்னே யனையென்கொல் சொல்லிய வாறு விளம்புகவே" (362)

என்பது திருக்கோவையாரிலுள்ள செய்யுளைப் பெயர்த்தமைத்தது.

"கண்ணினு ளாடுங் கருத்தினு ணீயன்றிக் கண்டிலனே" (61)

என்ற பாங்கிகூற்று, கம்பராமாயணத்திலுள்ள,

"கண்ணினு முளைநீ தையல் கருத்தினு முளைநீ"

என்ற அனுமன்கூற்றின் நினைவில் எழுந்தது.

---

* இவற்றிற்கு நேரான நூற்செய்யுட்கள் குறிப்புரையிற் காட்டப் பட்டுள்ளன.

"தேடு பொருட்குத் தகச்சுக மீந்து" (410)

என்று பரத்தையரைக் கூறும் கருத்து,

"அழிபவர் பொருள்கொண் டெள்ளுக்
கெண்ணெய்போ லளந்து காட்டிப்
பழிபடு போகம் விற்பார்"

என்னும் திருவிளையாடற் செய்யுட் பகுதியை நினைவுறுத்துகின்றது.

"பாவார் தருசிங்க நோக்கப் பொருளிப் படியெனநூல்
ஈவா ரறிவிப்ப தொப்ப"

என்றவிடத்துச் சூத்திரநிலையுள் ஒன்றன் பெயரையும்,

"துணைக், காரணமின்றி முதலு நிமித்தமுங் காரியத்தைப்
பூரண மாக்க லுறு"

என்புழித் தருக்கநூற்கருத்தையும் காணலாம்.

பழமொழிகள்

அங்கங்கே பழமொழிகளை யமைத்துள்ள பகுதிகள் வருமாறு:—

"மருவுபுண்ணில், வேலைச் செருகுவ துண்டோ" (50)
"உமிகுத்திய பேரின்" (101)
"புண்ணு ருடலைவெங் கோலிற் றுளைப்பதுபோல்" (126)
"அத்தியாரும் விளங்கனி மான" (230)
"காந்த மெதிர்வச மாகு மயமென" (247)
"உலைவாய் மெழுகாகி யிணைந்து" (280)
"அழலினெய் யூற்றுவ தாகும்." (413)

தொனி

"பாவிய லாருநற் காரிகை யோதியின் பாலமர்ந்தும்
மேவிய லாருநன் னூலிடை யாயா விதமதென்னே" (9)

என்பதில் காரிகை நன்னூலென்னும் இலக்கணநூற்பெயர்கள் தொனிக்கின்றன; காரிகைக்குமுன் நன்னூல் படிக்கவேண்டுமென்ற முறையும் இதனால் உய்த்துணரப்படுகின்றது.

"திருவாசகத்தினி லாசையுற் றேற்கு" (84)

என்பதில் திருவாசகமென்னுந் திருமுறைப்பெயர்தொனிக்கின்றது.

"..........................தாழ்குழற்கு
வேற்றுமை யாவதன் றல்வழி கண்டிவண் மேவிடினே" (251)

என்பதில் வேற்றுமை அல்வழியென்னும் சந்திகளின் பெயர்களும்,

"அவ்வீ ரடியன்பர் நேரடி யாகு மணிதிகழும்
இவ்வீ ரடிவஞ்சி தன்னடி யாகும்" (360)

என்பதில் நேரடி, வஞ்சியடி யென்னும் செய்யுளடிகளின் பெயர்களும் ஒலிக்கின்றன.

"தேசம் புகழுங் கலிங்கமுங் காஞ்சியுஞ் சேரக்கட்டி" (23)

என்பதில் கலிங்கதேசத்தின் பெயரும் காஞ்சிமாநகரத்தின் பெயரும் தோற்றுகின்றன.

"வேதாந்த வாக்கியஞ் சித்தாந்த மென்று விளம்புநெஞ்சே" (34)

என்பதில் வேதாந்தமென்பதனோடு இனம்பற்றிய பெயராகிய சித்தாந்தமென்பது வேறுபொருளில் ஒருங்கு வந்தது. நாயன்மாருள் ஒருவராகிய கண்ணப்பரைப்பற்றிக் கூறிய ஆசிரியர் வேறொரு நாயனாகிய சம்பந்தரின் பெயரும் உடன்தோற்றும்படிவேறுபொருள் பட,

"தாராரும் வேலவர் சம்பந்தர் கண்ணப்பர் சாதியர்நாம்" (133)

என்று அமைக்கின்றார். 356-ஆம் செய்யுளில் ஒன்றுமுதல் ஆறு எண்களின் பெயர்களிற் சில உரியபொருளோடும் சில வேறுபொருள்களோடும் ஒருங்கு வந்துள்ளன.

## ஒருபொருளிருசொற்கள்

ஒரேபொருளையுடைய இரண்டுசொற்களை வேறுவேறு பொருளில் வைத்துப் பாடுவார்:

"மலர் பூமேற் பயின்றன" (4)

"நன்றே சிலையெனக் கொண்டோன்" (205)

"உயிர் நமக் காவியி லீந்து" (269)

"அரவே பணியென வாழ்வோன்." (359)

### மயக்கம்

"பொன்னூரஞ்சேர் தேவாதி தேவன்" (4)

என்று ஓரிடத்தில் இறைவனைக் குறிக்கின்றார். இத்தொடர் முதலிற் பொன் ஊரஞ்சேர்ந்த சிவபெருமான் என்னும் பொருளைத் தோற்றச் செய்து மயக்கத்தை உண்டாக்கிப் பின் ஊன்றிநோக்குகையில், பொன் ஊரஞ்சேர் தேவுக்கு ஆதிதேவன் என்னும் பொருளைத் தருகின்றது. இப்படியே "பூமகள்சேய் நாமகள்" (435) என்னும் தொடர் முதலில் திருமகளின் சேயாகிய நாமகளென்ற மயக்கப் பொருளைத் தோற்றுவித்துப் பின் பூமகளுடைய சேயினது நாவி லுள்ள மகளென்ற மெய்ப்பொருளை ஊன்றியறியச்செய்கின்றது.

### குறிப்பு

வேங்கைமரத்தின்மேல் தலைவன் ஆம்பற்பூவை வைத்துச் சென்றனனென்பதைப் பரியாயக்குறிப்பினால்,

"சீரார் தருபுலி மேல்யானை வாழ்ந்திடச் செய்தனரே" (209)

என்பர். பாதிரிமரத்திற் காவிமலர்மாலையை வைத்தனனென் பதை எழுத்துக்குறிப்பினால்,

"காவாதி யாய்முத லில்லாத வாவிக் கடிமலர்த்தார்
பாவாதி யாய்முத லில்லா வெதிரி படைத்ததுவே" (210)

என்பர்.

### வெளிப்படை

வேங்கைமரத்தைப் பாயாதவேங்கை யென்றும் (74), பிள்ளை யை, "தேடத்தகாத பொருள்" (428) என்றும் வெளிப்படை நிலையாற் குறிப்பர்.

### அணிகள் முதலியன

பொருளணிகளுள் உவமை, உருவகம், சிலேடை, நிரனிறை, தற்குறிப்பு, பின்வருநிலை, இலேசம், வேற்றுமை, பரிவருத்தனை முதலியவைகளும், சொல்லணிகளுள் மடக்கு முதலியனவும், யமகம், திரிபு, எதுகைநயம், முரண் முதலியனவும் இந்நூலில்

வந்துள்ளன. அவை முற்றும் எடுத்துக்காட்டின் விரியுமாதலின் சிலவற்றின் எண்கள்மட்டும் பின்னே காட்டப்படுகின்றன:

1. உவமை : இல்பொருளுவமை, 25.

2. உருவகம் : 12.

3. சிலேடை : 6, 13, 14, 65, 85, 146, 167, 195, 214, 236, 242, 438.

4. நிரனிறை : 161, 163, 179, 195, 253, 383, 434.

5. தற்குறிப்பு : 11, 65.

6. பின்வருநிலை : 241.

7. இலேசம் : 224.

8. வேற்றுமை : 19.

9. பரிவருத்தனை : 158.

மடக்கு : 63, 91, 96, 114, 119, 128, 165, 182, 187, 235, 341, 349, 410, 412.

யமகம் : 79.

திரிபு : 90, 112, 377.

எதுகைநயம் : 63, 127, 141, 169, 180, 185, 226, 244, 287, 289.

முரண் : 81, 188, 409.

## அரும்பதங்கள்

இதிற் காணப்படும் அரும்பதங்களிற் சில வருமாறு:

| | |
|---|---|
| ஆரியர்—ஆரியக்கூத்தர். | பாந்தம்—இயைபு. |
| சேலன்—மன்மதன் | பாரியர்—கனவான்கள். |
| சொற்பனம்—கனவு. | வச்சிரம்—கள்ளி. |
| தயவு—தயை. | வாளாது—சும்மா. |

வாறு—விதம்.